Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + II = 14

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்,மூக்குக் கண்ணாடியகம்



பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 23 (07.11.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:38

# பாதுகாப்பு உடன்படிக்கை சிக்கல் தீர்க்கப்பட்டுவிட்டதாக அறிவிப்பு!

## விரைவில் கைச்சாத்தாகுமென ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நம்பிக்கை வெளியிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய விஜயத்தின்போது இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இந்த உடன்படிக்கையில் சில முக்கிய அம்சங்களில் இணக்கப்பாடு எட்டப்பட வில்லை என ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் விரைவில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் மேலும் –

இந்த உடன்படிக்கை தொடர்பாக இருந்துவந்த சில பிரச்சினைகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டிருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காற்றுப் போனதால் பஸ் வாய்க்காலில் பாய்ந்தது!

### வல்லையூடான போக்குவரத்து தடை

(வடமராட்சி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று தடம்புரண்டு வாய்க் காலுக்குள் பாய்ந்ததால் - நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான போக்குவரத்து சுமார் நான்கு மணிநேரம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

வல்லை மண்டான் வீதிக்கும், புறாப் பொறுக்கி ஆலடிக்கும் இடையில் உள்ள வயல் வெளிப் பகுதியிலேயே இந்தச் சம்ப வம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை மானிப்பாயிலிருந்து பருத் தித்துறை நோக்கிச்சென்ற பஸ் அச்சுவேலி யில் காற்றுப் போனதால் பயணிகளை இறக்கி வேறொரு பஸ்ஸில் ஏற்றிவிட்டு சாரதியும் நடத்துனரும் குறித்த பஸ்ஸை டிப்போவுக்கு கொண்டுசென்றனர்.

வல்லைப் பகுதியில் இன்னொரு பஸ் ஸிற்கு வழிவிட முயன்றபோது - இந்த பஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீதியில் படகுகளை நிறுத்தி பேசாலை மீனவர் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப் பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பேசாலை மீனவர்கள் நேற்றிரவு மீன்பிடிப் படகுகளை வீதியில் வைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுமாலை பேசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்களின் பாரிய மீன்பிடிப் படகு கள் நங்கூரமிட்டு தொழிலில் ஈடுபட்டன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பேசாலை மீனவர்கள் தமது படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் தலைமன்னார் பிரதான வீதிக்கு நடுவே வைத்து தமது எதிர்ப்பைத்

## இந்திய ஜனாதிபதி கலாமுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு!

(புதுடெல்கி)

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ராஷ்ரபதிபவனில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதா னப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலைகுறித்து இந்திய



ஈடுபட்டனர்.

நேற்றுமாலை பேசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்களின் பாரிய மீன்பிடிப் படகுகள் நங்கூரமிட்டு தொழிலில் ஈடுபட்டன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பேசாலை மீனவர்கள் தமது படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் தலைமன்னார் பிரதான வீதிக்கு நடுவே வைத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி பாரிய படகுகளில் வந்து மீன் பிடிப்பதால், மீன் வளங்கள் பெருமளவு அழிந்து செல்கின்றன என்றும் இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வராவிட்டால் மன்னார் மாவட்டத்தின் அனைத்து மீனவர்களும் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தப்போவதாக பேசாலை மீனவர் சங்கத்தின் தலைவர் சகாயம் பீரிஸ் தெரிவித்தார். (201)

(புதுடெல்கி)

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ராஷ்ரபதிபவனில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலைகுறித்து இந்திய ஜனாதிபதி விசேட ஆர்வம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா -

கடந்த 20 வருட காலப் பகுதியில் தற்சமயம் அமுலுக்குவந்த யுத்தநிறுத்தம் கடந்த மூன்று வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக தானும் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் மற்றும் ஆலோசகர் டிக்சிற் ஆகியோருடன் விரிவாக ஆராய்ந்திருப்பதாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)



# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு தமிழ்ச்செல்வன் அழைப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கான அழைப்பு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறைச் செயலகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் வியாழக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வே பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற இருக்கிறது.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மேற்கொள்ளவிருக்கும் உத்தேச சந்திப்பு முக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தீக்காயங்களுக்குள்ளான இருவர் நேற்று உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் குப்பி விளக்கு தட்டுப்பட்டுத் தீப்பற்றியதால் எரிகாயங்களுக்குள்ளான எட்டு வயதுச் சிறுமி சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் எட்டு வயதான எஸ். நிறைஞ்சினி என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

கடந்த 24 ஆம் திகதி இரவு குப்பி விளக்கு எரிந்துகொண்டிருந்தபோது, தட்டுப்பட்டு தீப்பற்றியதில் மேற்படி சிறுமி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று இவர் உயிரிழந்தார்.

இந்தச் சிறுமியின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இருவாரங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு - வட்டுவாகல் பகு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று வல்வெட்டித்துறையில்!

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தன்னிகரில்லா 20 ஆவது இலவசக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - ஜி.ரி.இசற் அதிகாரி வால்டர் கெல்லர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு, வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், பருத்தித்துறை பிரதேச செயலர் சு.வசந்தகுமார், வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் க.சூரியகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி வைத்திய சாலையில் நடந்த கண்பரிசோதனை முகாமில் தெரிவுசெய்யப்பட்ட அனைவருக்கும் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை - நிகொட் நிதியுதவியுடன் புதிதாக உருவாக்கப்பட்ட சமையல் கூடத்தினை இன்று காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைக்கவுள்ளார்.

அத்துடன் அதிநவீன இரத்தப் பரிசோதனை நுண்கருவி பிரிவை சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் டொக்டர் இ. தெய்வேந்திரன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (14)

## ஆன்மீக சொற்பொழிவு

(பருத்தித்துறை)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் சொற்பொழிவுகளின் தொடரில் இன்றுகாலை 10 மணிக்கு 'நற்சிந்தனை' எனும் தலைப்பில் ப. ஞானேந்திரன் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (14)

# ஜனநாயக கட்சி உறுப்பினரின் நினைவஞ்சலிக் கூட்டம்!

புதிய ஜனநாயகக் கட்சியின் மறைந்த அரசியற் குழு உறுப்பினர் சி.நவரத்தினத்தின், முதல் மாத நினைவஞ்சலிக்கூட்டம் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - கட்சியின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

'பொதுவுடமைப் போராளியின் நினைவுகள்' என்னும் நினைவு நூல் வெளியிடப்படுவதுடன், 'மனிதம் மண்ணில் உயரும் வரை' எனும் தலைப்பிலான கவிதாஞ்சலி நிகழ்வும் இடம்பெறும்.

## கலை விழாவும் பரிசளிப்பும்

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் கண்ணகை முன்பள்ளிச் சிறார்களது கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 1 மணிக்கு மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (24)

## மக்கள் தொடர்பகம் ஆனைக்கோட்டையில் திறப்பு

ஆனைக்கோட்டை வலயத்துக்கான அரசியற்துறை மக்கள் தொடர்பகம் அண்மையில் ஆனைக்கோட்டை தியாகசீலம் சிறுவர் பூங்காவுக்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது தேவைகள், குறைபாடுகள் குறித்து இங்கு தொடர்புகொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (47)

# யாழ்.மத்திய கல்லூரியில் திருக்குறள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி தமிழ் மன்றத்தின் அனுசரணையுடன் கலாநிதி இ.த.சிங்கன் அவர்களால் நடாத்தப்படும் திருக்குறள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் அறிமுகவுரையினை உதவி அதிபர் கு. சிவகுமார் நிகழ்த்துவார்.

கல்லூரியின் ஆசிரியர் விடயவுரையினை நிகழ்த்துவார்.

# சந்திர மௌலீச வித்தியாலயத்துக்கு பெறுமதியான நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இளைஞர் சமூக சேவையினரின் வருடாந்த செயற்பாட்டை முன்னிட்டு மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய நூலகத்திற்குப் பெறுமதிவாய்ந்த நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. நேற்றுமுன்தினம் மேற்படி அமைப்பின் தலைவர் சி.கேமலன் தலைமையிலான நிர்வாகக் குழுவினர் 11 ஆயிரம் பெறுமதியான நூல்களைப் பாடசாலை உபஅதிபரிடம் கையளித்தனர்.

யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து பின்தங்கிய நிலையிலுள்ள இப்பாடசாலைக்கு இவ்வளவு தொகையான புத்தகங்கள் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமென பாடசாலை உப அதிபர் திருமதி வி.பரமேஸ்வரன் தெரிவித்தார். (24)

**யாழ். மாவட்டத்தில்**

சர்வதேச மாணவர் பேரவை,
தமிழர் மாணவர் ஒன்றியம் - யாழ் மாவட்ட வலயக் கல்வி பணிமனைகளின் இணைந்த ஆதரவுடன்

**நமது ஈழநாடு** – தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**கிளிநொச்சி மாவட்டத்தில்**

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

## க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/வரணி மகாவித்தியாலயம்.
03. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ஹாட்லிக் கல்லூரி
05. யா/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ஞானாசாரியார் கல்லூரி.
13. யா/விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/இராமனாதன் கல்லூரி.
02. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/அருணோதயாக் கல்லூரி.
05. யா/யூனியன் கல்லூரி.
06. யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/மானிப்பாய் மெமோறியல்.
11. யா/இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா/சேர்வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/மத்திய கல்லூரி.
11. யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/இந்து மகளிர் கல்லூரி.
20. யா/இந்துக் கல்லூரி.
21. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

Global Info IDM (PVT) LTD. JAFFNA CENTER IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73,பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302,கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road,Thaddatheru Junction, Jaffna

### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம | - ஜெயபுரம் அ.த.க. பர்டசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12., | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

## அரச ஊழியர்களின் சம்பள உயர்வு; எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் இடைக்காலக் கொடுப்பனவான 2200 ரூபா அவர்களது அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டும் எதிர்வரும் வரவு - செலவுத்திட்ட ஆலோசனைமூலம், மேலும் சம்பள உயர்வு வழங்குவதெனவும் அரசு எடுத்திருந்த தீர்மானம் தற்போது மாற்றப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி அடுத்த ஆண்டு முதல் மாதாந்தம் எண்ணூறு ரூபாவை சம்பள உயர்வாக வழங்கி, தற்போது வழங்கப்படும் 2200 ரூபாவையும், இடைக்காலக் கொடுப்பனவையும் சேர்ந்து மூவாயிரம் ரூபாவாக சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதிகரிக்கப்படும் எண்ணூறு ரூபா கொடுப்பனவில் விதவைகள் ஓய்வூதியச் சம்பளக் கழிவாக பணம் கழிக்கப்பட்ட பின்னர், அந்த அதிகரிப்பு 590 ரூபாவாக மட்டும் இருக்கும். (தே)

### பிரதி அமைச்சர்கள் பலருக்கு

## அதிகாரங்கள் வழங்கப்படவில்லை; ஜனாதிபதியிடம் முறையிடத் தீர்மானம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர்களில் பெரும்பாலானோருக்குச் சம்மந்தப்பட்ட அமைச்சுக்களில் பங்களிப்புக்களைச் செய்வதற்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படாமையால் அவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

இதனால் அதிகமான அமைச்சுக்களில், பிரதி அமைச்சர்கள் பொறுப்புக்களற்ற நிலையில் இருப்பதோடு, ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் அவரிடம் இது குறித்து முறைப்பாடு ஒன்றை செய்வதற்கு பிரதி அமைச்சர்கள் குழு தீர்மானித்துள்ளது.

பிரதி அமைச்சர்களின் இந்தக் குழுவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் இணைந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் பலமுறை கலந்துரையாடியுள்ளதாகவும், இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இது குறித்து ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்தும் நியாயமான தீர்வு கிடைக்காது விட்டால், அதிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதோடு சம்மந்தப்பட்ட பிரதி அமைச்சர்கள் பதவிகளிலிருந்து விலகி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களாக செயற்படுவதெனவும் தீர்மானித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியோடு தொடர்புடைய மூத்த அமைச்சர்களில் அநேகமானோர் இவ்வாறு இருக்கும்போது, அமைச்சர்களில் சிலர் மட்டும் அமைச்சுக்களின் பிரதி அமைச்சுக்களுக்குரிய அதிகாரங்களை வழங்கி, செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது குறித்தும் ஜனாதிபதிக்குத் தனியாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

### ஜோர்ஜ் புஷ்ஷிற்கு சந்திரிகா வாழ்த்து

அமெரிக்காவின் ஜனாதிபதியாக மீண்டும் ஜோர்ஜ் புஷ் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

## விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள சிங்கராஜாவை விடுதலை செய்ய வலியுறுத்து

கடந்த 10 வருடங்களாக எந்த வித விசாரணைகளுமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள நல்லரட்ணம் சிங்கராஜா என்பவரை உடனடியாக விடுதலை செய்யும்படி இலங்கை அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச்சபை வற்புறுத்திக் கேட்டுள்ளது.

நல்லரட்டணம் சிங்கராஜா 1993 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

சிங்கராஜாவைக் கைது செய்த பொலிஸார் சிங்களத்தில் எழுதப்பட்ட குற்றப்பத்திரத்தில் வற்புறுத்திக் கையொப்பமிட வைக்கப்பட்டாரென, மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, குறிப்பிட்ட நபரை விடுதலை செய்வதற்கோ அல்லது சரியானமுறையில் விசாரணைக்கு உட்படுத்துவதற்கோ ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் வழங்கப்பட்ட காலக்கேடு முடிவடைந்துள்ளதெனவும், இதனால் உடனடியாக சிங்கராஜாவை விடுதலை செய்யும்படியும் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

நல்லரட்ணம் சிங்கராஜாவின் வழக்கு 1995 ஆம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பயங்கரவாத செயல்களுக்கு துணைபோனார். அரசாங்கத்துக்கு எதிராகவே திட்டமிட்டுச் சதிசெய்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவருக்கு 50 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

சிங்கராஜா மீதான விசாரணைகள் சட்டப்படி உரியமுறையில் நடத்தப்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த ஜூலைமாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற நூல் நிலையத்தில் பெருமளவு புத்தகங்கள் மாயம்

நாடாளுமன்ற நூல் நிலையத்திலிருந்த மிகவும் பெறுமதி வாய்ந்த 100 இற்கும் அதிகமான நூல்கள் காணாமல் போயுள்ளன.

இவற்றுள் அதிகமான புத்தகங்கள் நூல் நிலைய சட்டவிதிகளுக்குப் புறம்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் எடுத்துச் செல்லப்பட்டு, மீளவும் ஒப்படைக்கப்படாதவை எனத் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற நூலகரின் வேண்டுகோளுக்கு அமைய நாடாளுமன்ற செயலாளர் இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட புத்தகங்களின் பெறுமதி, 25 வீத குற்றப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 10 வருட காலப் பகுதிக்குள் இவ்வாறு தண்டப் பணம் செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை 80 இற்கும் அதிகம் எனவும் கூறப்படுகிறது. (தே)

## இந்திய வர்த்தக சமூகத்தவரையும் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தார்



இந்தியாவுக்கான ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் இந்திய வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

புதுடெல்கியில் உள்ள தாஜ்ஹோட்டலில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த 22 வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம், ரயில் சேவை, விவசாயம் மற்றும் பெருந்தோட்டத்துறை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்திய காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தற்பொழுது தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை மீள முன்னெடுத்துச் செல்வது உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

## அரசு – புலிகள் பேச்சுக்களின்போது முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஏற்கப்படும்

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்போது, அரசின் பிரதிநிதிகள் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் பிரதிநிதியொருவரும் பங்குபற்றுவார் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சமாதான செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் அதனை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள தேசிய ஆலோசனை சபையின் முதலாவது அரசியல் குழு, அண்மையில் கூடியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவினர் தனித்தரப்பாகப் பங்குபற்றுவது குறித்து, இதன்போது எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாற்றுக்குழுவின் பஷீர் - இது குறித்துக் கேட்டபோதே ஜனாதிபதி இதைத் தெரிவித்தார். (தே)

## 2005 இல் ஜனாதிபதி தேர்தல் இல்லை பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடும் இல்லை

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு இந்தத் தடவை தேர்தல் திணைக்களத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் எனச் செய்திகள் வெளியான போதும், தேர்தல் செயலகம் அது குறித்து நிதி ஒதுக்கீட்டு அறிக்கையை திறைசேரிக்கு அனுப்பவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்த ஆண்டு தேர்தல் திணைக்களத்தின் சாதாரண செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்களத்தின் பிரதான கணக்காளர் ஹப்பு ஆராச்சி தெரிவித்தார்.

எப்படியாயினும், எதிர்வரும் வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருப்பதால், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைத் தயாரித்து அனுப்பும்படி திறைசேரி தேர்தல் திணைக்களத்துக்கு அறிவிக்கவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் செயலகம் அன்றாட செலவுக்கான நிதி மதிப்பீட்டையே அனுப்பியுள்ளது.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டில் நடைபெறும் என அரசும், 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என, ஐக்கிய தேசியக் கட்சியும் அறிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தே)

## கடற்படையின் பாவனைக்கு பிரயாணிகளின் கப்பல்

இலங்கை கடற்படையின்ரின் போக்குவரத்துக்கென இதுவரை காலமும் நிலவி வந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பிரயாணிகள் கப்பலொன்றைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கு கடற்படை தீர்மானித்துள்ளது.

கடற்படையினரின் போக்குவரத்துக்கென இதுவரை தனியார் நிறுவனங்களின் கப்பல்களே பயன்படுத்தப்பட்டு வந்தன.

புதிதாகக் கொள்வனவு செய்யப்படவுள்ள கப்பலைப் பார்வையிடுவதற்கென கடற்படையின் பதவி நிலை உத்தியோகத்தரான றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம உட்பட்ட குழுவினர் இந்த வாரம் அவுஸ்ரேலியாவுக்குச் செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இதுவரைகாலமும் கடற்படையினரின் போக்குவரத்துக்கென வாடகை முறையில் கொள்வனவு செய்யப்பட்ட ஒஸ்ட்றிங்கோ எனும் கப்பலில் போதிய வசதிகள் இல்லாமல் இருப்பதுடன், பழுதடைந்தும், காணப்படுவதால் அதில் பயணிக்க போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள் மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## காணாமல் போயிருந்த சிப்பாய் கைது

நான்கு வருடங்களுக்கு முன்பு இராணுவத்திலிருந்து காணாமல் போனதாக கருதப்பட்ட இராணுவ சிப்பாயொருவர் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக வியாங்கொடை பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

சுதத் புத்திக ஜயவிக்கிரம என்ற இந்த இராணுவ சிப்பாய் வவுனியாவில் பணியாற்றியபோது கடமையின்போது காணாமல் போயிருந்தார். இது தொடர்பாக இவரது பெற்றோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கண்டுபிடித்து தருமாறு கோரி ஆட்கொணர்வு மனுவொன்றையும் தாக்கல் செய்திருந்தனர்.

மேஜர் ஜெனரல் நந்தா மல்லவாராச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோரை இந்த மனுவில் எதிரிகளாகக் குறிப்பிட்டு இவர்கள் தான் இதற்கு பொறுப்பு என்றும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

## ஆசிரியர்களைத் தெரிவுசெய்ய நேர்முகப் பரீட்சை விரைவில்

### கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் நியமிப்பதற்கென க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில்- சித்தியடைந்தவர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

அதற்கான பெயர்பட்டியலை கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தரா டிமெல் கடந்த வியாழனன்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்தியா கலிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.


ஒவ்வொரு பாடத்துறைக்கும் நிரப்பப்படவேண்டிய வெற்றிட எண்ணிக்கையின் மும்மடங்கு பரீட்சார்த்திகளின் பெயர் விபரங்கள் இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் நேர்முகப் பரீட்சையை நடத்தியதும், நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

கடந்த 14ஆம் திகதி தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இம்மாதம் 14ஆம் திகதிக்கு முன்பு 1000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இந்த 1000 ஆசிரியர்களுள் 400 பேர் ஆங்கிலப் பாடத்திட்டத்துக்கும், 350 பேர் ஆரம்பக் கல்விக்கும், உடற்கல்விக்கு 75 பேரும், எஞ்சிய 100 பேரும் விஞ்ஞான, கணித, அழகியல் பாடங்களுக்கும் நியமிக்கப்படவுள்ளனர். (தே)

# ஒரு நாள் தொடரையும் பங்களாதேஷ் இழந்தது!



(டாக்கா)

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரையும் நியூசிலாந்து அணி வெற்றி கொண்டது. நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

நியூசிலாந்து அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

முன்னதாக நடந்த டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற முன்னிலையில் கைப்பற்றியது. இந்த நிலையில் சொந்த மண்ணில் ஒருநாள் தொடரையாவது கைப்பற்றும் நோக்கத்துடன் களமிறங்கியது பங்களாதேஷ்.

ஆனால், முதல் போட்டியிலேயே தோல்வி அடைந்தது. இரண்டாவது போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதிலும் பங்களாதேஷ் அணியின் மோசமான ஆட்டம் தொடர்ந்தது. இந்த அணி 43.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

காலித் மசூத் அதிகபட்சமாக 41 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் ஸ்ரைரிஸ் 3, மில்ஸ் 2, பிராங்கிளின் 2, கெய்ன்ஸ் 2, விக்ரோறி 1 விக்கெட் வீழ்த்தினர்.

இதன் பின்னர் நியூஸிலாந்து அணி ஆட்டத்தை ஆரம்பித்தது. இதில் -சின்கிளயர், அஸ்ரில் ஜோடி அபாரமாக ஆடியது. இந்த ஜோடி 74 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் - அஸ்ரில் (29) ஓட்டங்களுடன் அகமதின் பந்தில் வெளியேறினார். இவரைத் தொடர்ந்து மார்ஷல் (2), ஸ்ரைரிஸ் (12), மக்மிலன் (7), மெக்கல்லம் (0) ஆகியோரையும் அகமது வீழ்த்தி, முதன்முறையாக ஐந்து விக்கெட் கைப்பற்றினார்.

விரைவில் முக்கிய விக்கெட்டுக்களை இழந்த நியூஸிலாந்து அணிக்கு சின்கிளயர் அரைச்சதம் அடித்து நம்பிக்கை தந்தார். இவர் 62 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதியில் நியூசிலாந்து அணி 44.4 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை எடுத்தது.



இதன் மூலம் 3 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்திய நியூஸிலாந்து 2:0 என்ற முன்னிலையில் ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது.

## முரளி கார்த்திக்குக்கு பரிசும், பதவியுயர்வும்

(பட்னா)

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக மும்பாயில் நடைபெற்ற 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு அடிகோலிய முரளி கார்த்திக்குக்கு ரொக்கப் பரிசும், பதவி உயர்வும் அளிப்பதாக இந்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத்யாதவ் அறிவித்துள்ளார்.

முரளி கார்த்திக், இந்திய ரயில்வே அணிக்காக விளையாடி வருகிறார். கடைசி டெஸ்ட் போட்டியில் மொத்தம் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி, ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

கடைசி டெஸ்ட் போட்டியில் வென்ற இந்திய அணிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார் லாலு. அத்துடன், இந்த வெற்றியில் முக்கிய பங்காற்றியதற்காக முரளி கார்த்திக்குக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசும், பதவி உயர்வும் அளிப்பதாக லாலு அறிவித்துள்ளார்.

## உதைபந்தாட்ட போட்டியில் இன்றைய ஆட்டங்கள்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ் மாவட்டப் பிரிவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய ஆட்டங்களாக றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும், வல்லை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் நீக்கலஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (12)

விளையாட்டு

## பவளவிழா கிரிக்கெட் போட்டிக்கு அசாருக்கு மட்டும் அழைப்பில்லை

(கொல்கத்தா)

இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் பவள விழா கிரிக்கெட் போட்டியை காண முன்னாள் கப்டன்களுக்கு இந்திய கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது. ஆனால், முகமது அசாருதீன் அழைக்கப்படவில்லை.

இந்திய கிரிக்கெட் சபை தனது பவள விழாவைத் தற்போது கொண்டாடி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இந்தியா - பாகிஸ்தான் இடையே சர்வதேச ஒருநாள் போட்டி நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கொல்கத்தாவின் ஈடன்கார்டன் மைதானத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி இந்த இரு அணிகளும் மோதவுள்ளன.

இந்தப் போட்டியைக் காண முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி கப்டன்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது இந்திய கிரிக்கெட் சபை.

முன்னாள் கப்டன்களுக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் பதிலுக்காக நாங்கள் தற்போது காத்திருக்கிறோம் என இந்திய கிரிக்கெட் சபை தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பட்டியலில் முன்னாள் கப்டன் அசாருதீன் பெயர் மட்டும் இடம்பெறவில்லை. கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் இவருக்கு ஆயுள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவர் அழைக்கப்படவில்லை.

அத்துடன், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான் உள்ளிட்ட இதர அதிகாரிகள் இந்தப் போட்டியைக் காண விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## வீரர்களின் சிறப்பான திறனால் வெற்றிகொள்ள முடிந்தது!

### அணித்தலைவர் ராவிட் தெரிவிப்பு

அணி வீரர்களின் சிறப்பான திறனால் வெற்றி கிடைத்தது என்று இந்திய அணி கப்டன் ராவிட் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் 107 ஓட்ட இலக்கை எட்ட முடியாமல் அவுஸ்ரேலியா 2 ஆவது இனிங்ஸில் 93 ஓட்டங்களில் சுருண்டது. இந்திய மண்ணில் அந்த அணி ஒரு இனிங்ஸில் பெற்ற குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

இதற்கு முன்பு 1959 - 1960 ஆம் ஆண்டில் கான்பூரில் நடந்த டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்சில் 105 ஓட்டங்கள் எடுத்ததே குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

இந்த வெற்றி குறித்து இந்தப் போட்டியில் இந்திய அணி கப்டனாக இருந்த ராகுல் ராவிட் கூறியதாவது -

முதல் இனிங்ஸில் 104 ஓட்டங்களில் ஆட்டம் இழந்த நிலையில் மீண்டுவந்து வெற்றி பெறுவது என்பது கடினமான காரியமாகும். அணி வீரர்களின் சிறந்த திறனான ஆட்டத்தாலேயே இது முடிந்தது. உலகின் சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அவுஸ்ரேலிய அணியை 107 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டவிடாமல் ஆட்டமிழக்கச் செய்தது சிறப்பானதாகும்.

இது சிறந்த டெஸ்ட் போட்டியாகும். ஆனால் சிறந்த முன்மாதிரியான டெஸ்ட் ஆகாது. லக்ஸ்மன், டெண்டுல்கர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தது. சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள் - இவ்வாறு ராவிட் கூறினார்.

இந்திய அணியின் வெற்றி மிகவும் சிறப்பானது. இது அணியின் நம்பிக்கையை அதிகரிக்கும் என்று காயம் காரணமாக டெஸ்டில் ஆடாத கப்டன் கங்கூலி கருத்துத் தெரிவித்தார்.

### மாவீரர் நாள் உதைபந்தாட்டப் போட்டி

## ஞான முருகன், டயமன்ஸ் அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகின!

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு - தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

இதில் வலிகாமம் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் ஆட்டம் தொடங்கி முதல் 18 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் கோல் காப்பாளரினால் நழுவ விடப்பட்ட பந்தை, ஞான முருகன் அணியினர் கோலாக்கத் தவறிவிட்டனர். ஆனால், 24 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை யங்கம்பன்ஸ் அணியினர் சரியாகப் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றனர். இந்தக் கோல் யங்கம்பன்ஸ் அணி வீரர் பிரகாஸினால் அடிக்கப்பட்டது. இதனால், இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது 17 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் ராசாவினால் தலையால் இடிக்கப்பட்ட பந்து மிகச் சிறப்பான கோலாக அமைந்தது. அதன் பின்னர் யங்கம்பன்ஸ் அணிக்கு 25 ஆவது நிமிடத்தில் கிடைத்த இலகுவான வாய்ப்பை பிரகாஸ் கோலாக்கத் தவறிவிட்டார். இதனால், இடைவேளைக்குப் பின்னர் யங்கம்பன்ஸ் அணியால் கோல் அடிக்க முடியவில்லை.

இரு அணியினரும் 1:1 என்ற கோல் கணக்கில் காணப்பட்டதால் தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஞான முருகன் அணியினர் யங்கம்பன்ஸ் அணியை 4:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகினர்.

அதனைத் தொடர்ந்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, தாவடி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கப்பட்டு முதலாவது நிமிடத்திலேயே அம்பாள் அணியினர் தமக்குக் கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டனர். பின்னர் 12 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி வீரர் தர்மேந்திரா தட்டிக் கொடுத்த பந்தை அந்த அணி வீரர் ராஜ்குமார் கோலாக்கினார். இதனால், இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி முன்னணி வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது டயமன்ஸ் அணி வீரர்களால் முதல் 10 ஆவது நிமிடத்தில் ராஜ்குமாரினாலும், 18 ஆவது நிமிடத்தில் அம்பாள் விளையாட்டுக் கழகக் கோல்க் காப்பாளரை மீறி பிரகாஸினாலும், 20 ஆவது நிமிடத் தில் டயமன்ஸ் அணித் தலைவர் அரவிந்தனாலும் கோல்கள் போடப்பட்டன. அதன் பின்னர் எவ்வளவு முயற்சித்தும் அம்பாள் அணியினரால் கோல் எதனையும் போட முடியவில்லை.

இதனால், ஆட்ட முடிவின்போது டயமன்ஸ் அணியினர் தாவடி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகினர். (12)

## ஏழாயிரம் ஓட்டங்களை ராகுல் ராவிட் கடந்தார்



இந்திய கப்டன் ராவிட் 7 ஆயிரம் ஓட்டங்கள் கடந்து சாதனை படைத்தார்.

அவுஸ்ரேலியாவிற்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியா 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பரபரப்பான வெற்றியைப் பெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய கப்டன் ராவிட் 7 ஆயிரம் ஓட்டங்கள் கடந்து சாதனை படைத்தார்.

2 ஆவது இனிங்ஸில் 5 ஓட்டங்களை எட்டியபோது ராவிட் இந்தச் சாதனையைக் கடந்தார்.

82 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள ராவிட் தற்போது டெஸ்ட் போட்டியில் ஒட்டுமொத்தமாக 7 ஆயிரத்து 22 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்.

இந்திய அணியைப் பொறுத்தவரை கவாஸ்கர் மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் மட்டுமே இந்த சாதனையைச் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே, இவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பிடிகள் எடுத்த இந்திய வீரர் என்ற பெருமையை இந்தப் போட்டியில் எட்டியது குறிப்பிடத்தக்கது.

முன்புவரை கவாஸ்கர் 108 பிடிகள் எடுத்து இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். தற்போது ராவிட் இந்தச் சாதனையைத் தன் வசம் வைத்துள்ளார். 37 உள்ளூர் போட்டிகளில் ஆடியுள்ள ராவிட் 2 ஆயிரத்து 829 ஓட்டங்கள்தான் பெற்றிருக்கிறார். அதேசமயம் வெளி நாடுகளில் நடந்த 45 போட்டிகளில் கலந்து கொண்டுள்ள ராவிட் 4 ஆயிரத்து 193 ஓட்டங்கள் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# முகாமைத்துவ கற்கை விண்ணப்பத்தை திறந்த பல்கலைக்கழகம் கோரியுள்ளது

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மானிடவியல் சமூக விஞ்ஞான பீடத்தால் நடத்தப்படும் தொழில் முகாமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கைநெறியில் - 2005/2006 கல்வி ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கான விணணப்பங்கள் - இந்த மாதம் 26 ஆம் திகதிவரை விநியோகிக்கப்படும் எனவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்குமுன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தொலைக்கல்வி முறையில் நடைபெறவுள்ள இந்தக் கற்கை நெறிகள் மட்டுப்படுததப்பட்ட அளவுகளில் விரிவுரைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்துவரும் சந்தைப் பொருளாதாரத்தில், சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்கு இந்தக் கற்கைநெறி மிகப் பொருத்தமானதாகும்.

க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஏதேனும் ஆறு பாடங்களில் சித்திபெற்றவர்கள் - இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் பத்திரங்களை நேரில் பெறவிரும்புபவர்கள் - வார நாட்களில் நாவல, நுகேகொடை வீதியிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுத் தொடர்பு அலுவலகத்திலிருந்து ரூபா நூற்றி ஐம்பதைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

தபாலில் பெறவிரும்புபவர்கள் 25 செ.மீற்றர் x 20 செ.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட கடித உறையுடன், சாதாரண தபால் எனின் - ஒன்பது ரூபாய் முத்திரையையும், பதிவுத்தபால் எனில் - இருபத்தியொரு ரூபா முத்திரையையும் ஒட்டி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு நூற்றி ஐம்பது ரூபா பெறுமதிக்குப் பெறப்பட்ட வங்கி வரைபை (வங்கி ஆவணத்தை) இணைத்து, நிதியாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், த.பெ.இல: 21, நாவல, நுகேகொடை. என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புபவர்கள்- 011 2805566 இணைப்பு 327 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டும் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (31)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட எழுவைதீவு, அனலைதீவுப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.சுடர் மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (113)



கச்சதீவுப் பகுதியில் 2000 பனம் விதைகள் நாட்டச் சென்றபோது, சம்பிரதாயபூர்வமாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிரஞ்சன் முதல் பனம் விதையை நடுகின்றார். (113)

## கண் பரிசோதனை முகாம்

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகஸ்வரி சனசமூக நிலையம் நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் நாளை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பார்வையற்றவர்களுக்குக் குறைந்த விலையில் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் நிரந்தரமாக இலவச கண் பரிசோதனை முகாம் அமைப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. (82)

## கசிப்பு விற்றவர் கைது

உரும்பிராய் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை கோப்பாய் பொலீஸார் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் அன்னங்கை வீதியோரமாக வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, இவர் கைதானார்.

இவரிடமிருந்து கசிப்பு, போதைப் பொருட்கள் என்பன மீட்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட நபர் - வீட்டில் தினமும் தகாத வார்த்தையைப் பிரயோகிப்பதன் காரணமாக, அந்தப் பகுதிப் பொதுமக்கள் கொடுத்த தகவலின்படியே இவர் கைது செய்யப்பட்டார். (82)

# வறிய மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டி நூல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் வறிய மாணவர்களுக்கு, யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தால் பரீட்சை வழிகாட்டல் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறும் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பரீட்சை வழிகாட்டி நூல்கள் வழங்கப்பட்டிருப்பதாக தமிழ் மாணவர் ஒன்றியம் ஊடாக இணைப்பாளர் ஜெ.கோகிலநாத் தெரிவித்தார். (17)

# குருநகர் சென்.ஜேம்ஸ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு தின விழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் - சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புதின விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் எஸ்.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜாவும், கௌரவ விருந்தினராக குருநகர் ஜேர்மன் கிளைத் தலைவர் யூலியஸ் யூஜின் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை பரிசளிப்பு தினத்தன்று மாணவர்களது கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த விழா சிறப்புற இடம்பெற குருநகர் ஜேர்மன் சமூகசேவைகள் அமைப்பு அனுசரணை வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# பொலிகையூர் சிந்துதாசனின் கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பொலிகையூர் சு.க.சிந்துதாசன் எழுதிய 'ஓரிடம்' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா இன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இரா. அகிலன் தலைமையில் இடம்பெறும். இந்த நூலின் அறிமுகவுரையை இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்துவார்.

கலாபூஷணம் வே.க.பாலசிங்கம் நூலை வெளியிட்டு, வெளியீட்டுரையை நிகழ்த்துவார். முதற்பிரதியை பி.கிருஸ்ணானந்தன் பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரையை எஸ்.குணேஸ்வரன், ச.இராகவன் ஆகியோர் நிகழ்த்துவர்.

# கல்விசாரா ஆளணியினருக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகள், ஆசிரியக் கல்லூரிகள், கல்வியற் கல்லூரிகள், ஆசிரிய மத்திய நிலையங்கள் என்பவற்றில் நிலவும் - கல்வி சாரா ஆளணியினரிடையேயுள்ள வெற்றிடங்களை நிரப்பக் கல்வி அமைச்சுச் செயலாளர் வைத்திய கலாநிதி தாராடி மெல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

காவல்காரர், சமையல்காரர். இரசாயனகூடசேவகர், நூலகசேவகர் மற்றும் தொழிலாளர்களுக்கான வெற்றிடங்களே நேர்முகப்பரீட்சை ஒன்றினூடாக நிரப்பப்படவுள்ளன.

இரசாயனகூட சேவகர், நூலக சேவகர் போன்ற வெற்றிடங்களுக்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஆறு பாடங்கள் சித்தியடைந்த 18 - 45 வயதுக்கும் இடைப் பட்டவர்களும், காவல்காரர், தொழிலாளர் போன்ற வெற்றிடங்களுக்கு 8 ஆம் தரத்தில் சித்தியடைந்த 18-45 வயதுக்கு இடைப்பட்டவர்களும், சமையற்காரர் வெற்றிடங்களுக்கு 8 ஆம் தரத்தில் சித்தியடைந்த 21-40 வயதுக்கு இடைப்பட்டவர்களும் விண்ணப்பிக்கமுடியும்.

ஓய்வூதிய உரித்துடைய நிரந்தரமான பணிநிலைக்கு, இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களும், மாதிரி விண்ணப்பப்படிவமும் இந்த மாதம் 5 ஆம் திகதி வெளியான லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டுள்ளன. (31)

# மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாபெரும் கைத்தொழில் கண்காட்சி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இந்த வருட இறுதியில் மாபெரும் கைத்தொழில் கண்காட்சியும், கழியாட்ட நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால், கல்லூரி மைதானத்தில் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் ஜனவரி 2 ஆம் திகதி வரை இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறன.

தேசிய ரீதியில் நடைபெறவுள்ள கண்காட்சியிலும், விற்பனையிலும் சிறு உற்பத்தி கைத்தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் தமது பொருட்களை காட்சிக்கு வைக்கவுள்ளனர்.

தேசிய ரீதியில் பிரதேச பொருட்களை முதன்மைப்படுத்தும் நோக்கிலும், இந்துக் கல்லூரியின் வளர்ச்சி நிதிக்காகவுமே இந்தக் கண்காட்சி விற்பனையும், கழியாட்ட நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கச் செயலாளர் பேராசிரியர் அ.லீலாகிருஷ்ணன் தெரிவித்தார். (91)

# விபுலானந்தர் வீதியை திருத்துமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மாதகல் விபுலானந்தர் வீதி- நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது.

குன்றும், குழியுமாகவுள்ள இந்த வீதியில் - மழை நீர் தேங்கியுள்ளதால், நாளாந்தப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கே இந்தக் கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேல் இந்தவீதி புனரமைக்கப்படவில்லை எனவும், இதனால் நாளாந்தம் தாம் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணம் செய்வதாகவும் ஐம்பது பேர் கையெழுத்திட்டு, மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் பி.விக்டருக்கு கடிதம் அனுப்பி வைத்தள்ளனர். (91)

## உரிமை கோரப்படாத பொருட்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன!

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாதவையுமான துவிச்சக்கரவண்டிகள், சங்கிலிகள், கைச்சங்கிலிகள், தோடுகள, மோதிரங்கள் போன்றவை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இந்த மாதம் 27 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு ஏலத்தில் விற்பனைசெய்யப்பட இருப்பதாக நீதிபதி இ.த.விக்கினராஜா தெரிவித்தார். (31)

# குமுதினி பயணிகள் படகு மீண்டும் பழுதடைந்துள்ளது

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவந்த குமுதினிப் படகு, கடந்த 4 நாட்களாகத் திருத்தவேலை காரணமாகச் சேவையில் ஈடுபடவல்லை.

கடந்த ஒருவருடகால திருத்த வேலையின் பின்னர், சேவையில் ஈடுபடுத்தப்பட்ட குமுதினிப் படகு- மீண்டும் இயந்திரப் பகுதியில் கோளாறு ஏற்பட்டு, சேவையில் ஈடுபட முடியாதுள்ளது.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால், திறந்த படகுகளில் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டே தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர்.

இதேவேளை, குமுதினிப் படகின் கூடாரப் பகுதி சேதமடைந்திருப்பதால், படகினுள் இருக்கும் பயணிகள் மழைகாலத்தில் குடை பிடித்தவாறே செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(113)

## கட்டடத் தொகுதி அமைப்பு

இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய மாணவர்களின் நீண்டநாள் தேவையாகவிருந்த கட்புல, செவிப்புல கட்டடத் தொகுதி -சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்புவிழா - மிக விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. (101)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2005 ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்பும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்கள் - விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச செயலகத்தில் பெற்று, விண்ணப்பிக்கும்படி பிரதேச செயலாளர் தெரிவித்தார். (63)



## விளையாட்டு அரங்கம்

# சர்வாதிகாரப் போக்கு கவிழ்ந்துவிடும்


ஜக்மோகன் டால்மியா யாமிருக்கப் பயமேன்

25 வருடகாலமாக தண்ணிகாட்டிய சந்தனக் கடத்தல் வீரப்பனை, அவரது இடத்திலேயே வைத்துக் கொன்று அவரின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்த இந்திய அதிரடிப்படையினர் போன்று, 35 வருடகாலமாக சொந்தமண்ணில் போக்குக்காட்டிய இந்திய அணியினரை வீழ்த்தி, தமது கிண்ணக் கனவை நனவாக்கியுள்ளனர் அவுஸ்ரேலிய அணியினர்.

நாக்பூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டபோது பலருக்கு ஆச்சரியம். அதற்குக் காரணம், அணியில் கங்கூலி இடம்பெறாமையே. இது குறித்து அணியின் உடற்தகுதி நிபுணர் லைபஸ் கருத்துக் கூறும்போது - கங்கூலிக்கு சென்னை டெஸ்டிலேயே தொடையில் தசைப்பிடிப்பு ஏற்பட்டிருந்தது. இருப்பினும் இந்த டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்னர், அது குணமாகிவிடும் என எதிர்பார்க்கப்பட்டதால் இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்றார்.

எவ்வாறு வீரப்பனின் இறப்பில் மர்மம் தொடர்கிறதோ, அவ்வாறே கங்கூலியின் உடற்தகுதி விடயத்திலும் சந்தேகம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஏற்கனவே பெங்களூர் டெஸ்டை இழந்து பின்தங்கிய நிலையிலிருந்த இந்திய அணியை நட்டாற்றில் விட்டது போல் இவரது செயற்பாடு அமைந்துவிட்டது. எங்கே அவுஸ்ரேலிய அணியிடம் தொடரை இழந்துவிடுவோமோ என்று நினைத்தோ வழமைபோல டிராவிட்டுக்கு பழிச்சொல் வரும்படியாக தனது உடற்தகுதியை காரணம் காட்டி ஒதுங்கிக்கொண்டார் கங்கூலி.

இவ்வாறு கங்கூலி செய்வது ஒன்றும் புதிதான விடயமல்ல. 2002 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணி, இந்தியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியது.

முதல் 5 ஒரு நாள் போட்டிகளில் 3 போட்டிகளில் கங்கூலியின் தலைமையில் இந்திய அணி தோல்வி அடைந்தது. ஏனைய இரு போட்டிகளிலும் தோல்வி ஏற்படலாம் என்று கருதி, அந்தப் பழி தன்மீது வீழ்ந்து விடக்கூடாதென்பதில் கவனமாக இருந்தார் அவர்.


கங்கூலி சரிவு தெரிகிறது

அதற்கேற்றாற்போல் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், அணியின் வெற்றியைக் கருதாது தனது சொந்த நலனைக் கருதி, உடல் நிலையைக் காரணம் காட்டி கங்கூலி கடைசி இரு போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லையென சில ஊடகங்கள் அவர் மீது கடும் விமர்சனத்தை தொடுத்திருந்தன.

இவ்வாறு பொறுத்த நேரங்களில் காலைவாரும் கங்கூலி மீது அணி நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால் அதற்கு விடை ஒன்றுமே இல்லை என்பது தான்.

பொதுவாக ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபையும் விளையாட்டு வீரர்களைத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுதான் வழக்கம். ஆனால் இந்திய கிரிக்கெட்டைப் பொறுத்து அணித் தலைவர் கங்கூலியின் இழுத்த இழுப்புக்கெல்லாம் கட்டுப்பாட்டு சபை அசைந்து ஆடுகிறது என்றால் அது மிகையில்லை.

இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரான டால்மியாவின் செல்லப் பிள்ளையாக கருதப்படுபவர் கங்கூலி.

அவ்வப்போது கங்கூலியின் தலைக்கு தலைமைப்பதவியால் ஆபத்து வந்தபோது அதனைத் தலைப்பாகையோடு அகற்றிவிட்டவர் டால்மியாதான்.

இப்படிப்பட்ட டால்மியாவின் பதவிக்காலம் கடந்த செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டது. இந்தநிலையில் புதிய தலைவர் கங்கூலி விடயத்தில் கூடிய கவனம் எடுப்பார் என்றே கருதப்பட்டது.

ஆனால் தலைவர் பதவிக்கு வந்தவர் டால்மியாவின் அடிவருடியான பஞ்சாப் கிரிக்கெட் சங்கத் தலைவரான ரன்பூர் மகேந்திரா. கிரிக்கெட் சபைத் தலைவர் தேர்தலில் மகேந்திராவும், சரத்பவாரும் சமமாக வாக்குகள் பெற்றிருந்த நிலையில் தனது விருப்புவாக்கை மகேந்திராவுக்கு வழங்கி அவரை வெற்றி பெறச்செய்தார் டால்மியா.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவராக இல்லாவிட்டாலும், சபையின் போஷகராக டால்மியா தொடர்ந்தும் நீடித்து வருவதனால் அணி நிர்வாகத்தில் இவரின் தலையீடு தொடர்வதைத் தடுக்க முடியாது. அதனால் கங்கூலி தனிக்காட்டு ராஜாபோல் தொடர்ந்தும் விளங்கவே போகிறார் என்பதும் கசப்பான உண்மையே.

— விமலன்.

# ஏதோ நினைவுகள், கனவுகள்


சச்சின் டெண்டுல்கர் கங்கூலியை மன்னித்துவிடுங்கள்

*நாக்பூரில் நடைபெற்ற இந்திய – அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் வென்று, தொடரைக் கைப்பற்றியதன் மூலம் அலன் போடர், மார்க் ரெய்லர் – ஸ்ரீவ்வோ போன்ற கிரிக்கெட் ஜாம்பவான் களாலேயே முடியாத காரியத்தை கில்கிறிஸ்ட் தலைமையிலான அணியினர் சாதித்துக் காட்டியுள்ள னர்.*

*இதில் இந்திய அணியினர் படு தோல்வி அடைந்தது ஒரு பரிதாபம் என்றால், மார்ட்டின், கிளார்க், சைமன் கட்டிச் ஆகிய மூவரும் சதமடிக்க முடியாமல் ஆட்டமிழந்தது இன்னொரு பரிதாபம்.*

*இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் கிளார்க் 91 ஓட்டங்களுடனும் இரண்டாவது இனிங்ஸில் சைமன் கட்டிச், மாட்டின் முறையே 99, 97 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்திருந்தனர். இந்தச் சோதனையில் சாதனை படைத்தவர்கள் இருவர். அதில் ஒருவர் ஸ்ரீவ்வோ. மற்றையவர் மைக்கல் ஸ்லேற்றர். இவர்கள் இருவரும் தலா 9 முறை சதமடிக்கமுடியாமல் 90 களில் ஆட்டமிழந்தனர்.*

*இந்த விடயத்தில் முன்னாள் அவுஸ்ரேலிய வீரர் கிளென் ஹில்லுக்கு ஒரு தனிப்பெருமையுண்டு. இவர் தொடர்ந்து மூன்று டெஸ்ட்களிலும் 99, 98, 97 என இறுக்கமாக அடித்து வித்தியாசமான சாதனை படைத்திருந்தார் என்பது ஒரு சுவாரஸ்யமான தகவல்.*

*ஏற்கனவே முதல் இனிங்ஸில் சதமடித்த மாட்டின் இரண்டாவது இனிங்ஸிலும் சதமடித்திருந்தால் ஒரு டெஸ்ட் போட்டியின் இரண்டு இனிங்ஸிலும் சதமடித்த பெருமை கிடைத்திருக்கும்.*

*அத்தோடு 1947–48 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அணிக்கெதிராக மெல்போர்ண் மைதானத்தில் சேர்.டொன் பிரட்மன் இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்த சாதனையையும் சமப்படுத்தியிருக்க முடியும்.*

*இது ஒரு புறமிருக்க 4 ஆம் நாள் ஆட்டத்தின் போது டெஸ்ட் போட்டியொன்றில் வெற்றி இலக்காக 500 ஓட்டங்கள் கொடுப்பதே அரிதான ஒரு விடயம். இருந்த போதிலும் தொடர்ச்சியாக இரண்டு சதங்களை அடித்து மூன்றாவது சதத்துக்காக காத்திருந்த மாட்டினுக்காக 542 ஓட்டங்கள் வரை ஆட்டத்தைத் தொடரச் செய்த அவுஸ்ரேலிய அணி நிர்வாகத்தையும், இந்த வருட முற்பகுதியில் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய அணி முல்ரானில் விளையாடிய முதற் போட்டியில் – டெண்டுல்கர் 194 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்த இந்திய அணி நிர்வாகத்தையும் தக்க நேரத்தில் ஒப்பிட்டுக்காட்டிய தொலைக்காட்சி வர்ணனையாளரான சஞ்சேய் மஞ்ரேக்கரையும் பாராட்டியே தீரவேண்டும்.*



மஞ்ரேக்கர் உள்ளதைச் சொன்னவர்

— சர்மிளா

# விடாமுயற்சி வெற்றி தரும்

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 1500 மீற்றர், 5000 மீற்றர் இரண்டு நிகழ்வுகளிலும் தங்கப் பதக்கங்கள் வென்றவர் ஹிக்கம் எல் குறோஜ். இவர் தனது சர்வதேச தடகள வாழ்க்கையை 2006 ஆம் ஆண்டில் முடித்துக் கொள்ள உத்தேசித்துள்ளார்.

எல்குறோஜ் 1500 மீற்றர், 2000 மீற்றர் உலக சாதனை நேரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பவர். இப்பொழுது அவரது நோக்கம் 2005 ஆம் ஆண்டில் தற்போது கெனனிஸா பிக்கெலே தன்னகத்தே கொண்டுள்ள 5000 மீற்றர் ஓட்ட உலக சாதனை நேரத்தை முறியடிப்பதேயாகும். தற்போது முப்பது வயதாகும் குறோஜ், கடந்த பத்துவருடகாலமாகத் தடகள வீரராக இருந்து வருபவர். இவர் கடந்த வருடம் பாரிஸ் சம்பியன் ஷிப் போட்டிகளில் 1500 மீற்றர் தங்கம் வென்றபோது, இவர் தொடர்ச்சியாகப் பாரிஸில் தங்கம் வென்ற நான்காவது முறையாக அது அமைந்திருந்தது. மேலும் ஏதென்ஸில் 10000 மீற்றர் தங்கம் வென்று, 5000 மீற்றர் தங்கம் தனக்கு நிச்சயம் என்று எண்ணியிருந்த பிக்கெலேயைத் தோற்கடித்துச் சாதனை புரிந்தவர் இவர். எனவே அடுத்தவருடம் இவர் பிக்கெலேயின் சாதனையை முறியடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


எல் குரோஜ் தன்னம்பிக்கையே சாதனை

— யாழினி.

# தட்டப்படும் ஏணிகள்

சர்வதேச கிரிக்கெட் அணிகள் வெற்றி காணும் போது, அணித் தலைவர், அணி வீரர்கள் முதன்மைப்படுத்தப்படும் அளவிற்கு பயிற்றுநர் முதன்மைப் படுத்தப்படுவதில்லை. ஆனால், தோல்விகாணும் சந்தர்ப்பங்களில் பெரிதும் விமர்சிக்கப்படுபவரும், இடைநிறுத்தப்படுபவரும், கண்டிக்கப்படுபவரும் பயிற்றுனரே. ஏன் இந்த பட்சபாதகமான நிலை?

தென் ஆபிரிக்க வீழ்ச்சிக்குப் பின்னர் பயிற்றுநர் பதவியில் இருந்த எரிக் சிமன்ஸ் மீது சுட்டு விரல் நீட்டப்பட்டது. தற்போது புதிய பயிற்றுநர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் இதில் இன்னொரு பக்கம் இருக்கிறது. உலகக் கிண்ணப் போட்டிகளின் பின். தென் ஆபிரிக்க அணித் தலைமையில் இருந்து ஷோன் பொலொக் நீக்கப்பட்டு மிகவும் வயதில் இளையவரான கிரேம் சிமித் அணித் தலைவராக்கப்பட்டார். ஆனால் அது அணியில் இருந்த மூத்த வீரர்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை என்பது ஒரு இரகசியம் அல்ல. இதுவே வீழ்ச்சிக்குக் காரணமாக அமைய, குற்றம் சாட்டப்பட்டவரோ எரிக் சிமன்ஸ்.



டேவ் வட்மோர்
ஓயாத முயற்சி

டேவ்வட்மோர் உலகின் சிறந்த தொரு பயிற்றுநராக முத்திரை குத்தப் பட்டவர் . இலங்கை அணியின் எழுச்சிக்கே வித்திட்டவர் அவரே. அவர் தற்போது வங்களா தேச அணியின் பயிற்றுநர். ஆனால் வங்களா தேச அணி நிமிர முடியாமல் இருக்கிறது. இதற்கு எப்படிப் பயிற்றுநர் காரணமாக முடியும் அவர் காட்டுகின்ற வழியைப் பின்பற்ற வேண்டியது வீரர்களின் கடமை. அதை பயிற்றுநர் மீது சுமத்துவது அபத்தம்.

இதேவேளை, பிறைன் லாறா மற்றும் பயிற்றுநர் ஒகஸ்ரின் லோஜி இருவரும் மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் அதிருப்திக்கு உள்ளாகி இருந்தனர். இது இங்கிலாந்திடம் மேற்கிந்திய அணி தோல்வியைக் கண்டபோது நடைபெற்ற சம்பவம் . ஆனால் ICC கிண்ணத்தை மேற்கிந்திய அணி வென்ற போதும் பயிற்றுநர் கஸ்லோசியேதான். ஆனால் ஓரளவில் மேற்கிந்திய கிரிக்கெட் அணியுடன் விரக்தியுற்ற இவர் தற்போது பதவி விலகி விட்டார்.

ஆனால் ஓரளவிற்கு இன்றைய நிலைமைக்கு மேற்கிந்திய அணியை உயர்த்தக் காரணமாக இருந்தவர் கஸ்லோஜி . இவருக்கும் திடீர் வளர்ச்சியை அணி பெற வேண்டும் என்ற நிபந்தனை விதித்தால் அது சாத்தியமாகுமா?

இன்னொரு உதாரணமாக , சிம்பாப்வே அணியை எடுத்துக் கொள்ளலாம். இந்த அணி தனது அடிக் கட்டுமானத்தையே இழந்திருக்கிறது. இந்த அணிக்கு நியமிக்கப்படும் எந்த ஒரு பயிற் றுநரும் மந்திரத்தால் மாங்காய் வீழ்த்த முடி யுமா? இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் சிம்பாப்வேப் பயிற்றுநர் நீண்ட காலம் குற்றச் சாட்டுக்கு உட் படாதவராக இருக்க முடியும்.



கஸ்லோகி
வளர்ச்சியில் பங்குகொண்டு

எனவே மொத்தத்தில் பார்க்கும் போது எழுந்தமானமாகப் பயிற்றுநர்களைக் குறை கூறுவதோ அல்லது அவர்களைப் பதவி விலக்குவதோ எந்த வகையிலும் நியாயமானதாக இருக்கப் போவதில்லை. இந்திய அணியின் பயிற்றுநர் ஜோண்ரைட் இந்திய அணியின் எழுச்சிக்கு அளித்த பங்கு மிக அதிகம். ஆனால் அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக இந்தியா பாதகமான நிலையையே எதிர்நோக்குகின்றது. எனவே இங்கு பயிற்றுநர் தவறா? இந்திய அணியின் வீரர்கள் தவறா?

- நிர்மலன்.

# சொல்லியா தெரியவேண்டும்




கஸ்பரோவ்
மேதாவி

சதுரங்கம் (CHESS) ஒலிம்பியாட் நாடுகளுக்கு இடையே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாக நடாத்தப்படும் குழு நிகழ்வுப் போட்டிகளாகும். 1924 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டிகள் இந்த வருடம் 36 ஆவது தடவையாக நடைபெற்று முடிந்திருக்கிறது. ஸ்பானியாவின் கல்வியா நகரில், ஒக்ரோபர் 14 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதிவரை நடைபெற்ற இந்த சதுரங்கத் திருவிழா, உலகின் இரண்டாவது பெரிய போட்டி நிகழ்வாகும். நூற்றி எழுபது நாடுகள் பங்குகொண்ட இந்தப் போட்டிகள், எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

பொதுவாக ஆண்கள் குழுப் போட்டிகளில் நான்கு பேரும், மகளிர் குழுவில் மூன்று பேரும் கலந்து கொள்ளும், அதிமூளைசாலிகளின் விளையாட்டுச் சுற்றுப்போட்டி இது. பதினான்கு சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் 129 ஆண்கள் குழுக்களும், 87 பெண்கள் குழுக்களும் கலந்துகொண்டன.

இந்த மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி ஸ்பானிய நாட்டின் SOL ANTILAS ஹோட்டலில் முழுவுக்கு வந்தபோது 14 ஆவது சுற்றின் முடிவில் உக்ரெய்ன் நாடு 39.5 புள்ளிகள் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும், ரஷ்யா 36.5 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் 36.5 புள்ளிகளைப் பெற்று ஆர்மீனியா வெண்கலப் பதக்கத்தையும் வென்றன. ரஷ்யா, ஆர்மீனியா இரண்டு நாடுகளும் சமமான புள்ளிகள் பெற்றபோதும் TIE BREAK மூலம் வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் தீர்மானிக்கப்பட்டன.



விஸ்வநாதன் ஆனந்
ஆசியாவின் பெருமை

மறுபுறம் மகளிர் குழுப் போட்டிகளில் - சென்றமுறை சாம்பியனாக இருந்த சீனாவே இந்த முறையும் 31 புள்ளிகளுடன் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய அமெரிக்கா 28 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும் ரஷ்யா வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.

- ரி.இராஜசிங்கம்.

# கலைந்த கனவு

பாகிஸ்தான் அணிக்கெதிராக கராச்சியில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்று இலங்கை அணி ஹற்றிக் சாதனை படைக்கும் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தமது கோட்டையான கராச்சியில் எந்த அணியும் தம்மை வென்றுவிட முடி யாது என்பதனை மீண்டும் நிரூபித்துக்காட்டியுள்ளது பாகிஸ்தான் அணி. பைசாலாபாத்தில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியை 201 ஓட்டங்களால் தோற்கடித்த இலங்கை அணி, கராச்சியில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்டுக்களால் தோல்வியைத்தழுவிக் கொண்டமையானது, இலங்கை அணி வீரர்களிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய சில திறமைகள் இன்னும் இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கியுள்ளன.

சனத் மற்றும் சங்கக்கார ஆகிய இருவரும் சதங்களைப் பெற்றுக் கொடுத்த நிலையிலும் இலங்கை அணியினால் இப்போட்டிகளைச் சமன் செய்ய முடியாது போனதன் காரணம் என்ன என்கின்ற வினா எழுகின்றது. அதாவது பாகிஸ்தான் அணி தனது முதலாவது இனிங்ஸில் 478 ஓட்டங்களைப் பெற்றவேளையில், இந்தப் போட்டியை இலங்கை அணி யால் வெல்ல முடியாது என்ற நிலைமை தெட்டத் தெளிவாகிவிட்டது. ஆனால் போட்டியை சமனிலைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் நிறையவே இருந்தும், இலங்கை அணியால் இந்தப் போட்டியை சமனிலைப்படுத்த முடியாமைக்கான காரணம், இலங்கை அணியின் மத்திய மற்றும் பின்னிலை வீரர்களால் நின்று நிலைத்திட முடியாமல் உள்ளமையே ஆகும்.



இன்ஸமாம்
ஓம், ஓம் ஒருமாதிரி சமனிச்சிட்டம்.

இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்சின் முதலாவது நாள் ஆட்டத்தின்போது 134 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்திருந்தது. ஆனால் இண்டாவது நாள் ஆட்டத்தின்போது சங்கக்காரவின் விக்கெட் வீழ்த்தப்பட்டபோது, இலங்கை அணி வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தையே ஆட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உள்வாங்கப்பட்டார்கள். ஆனால் தொடர்ந்து வந்த வீரர்கள் நிலைத்து நின்று ஆடா மையே தோல்விக்கான பிரதான காரணமாகும்.



சங்ககார
நழுவிப்போன வாய்ப்பு

அதாவது இலங்கை அணியின் பந்து வீச்சாளார்களும் பந்துவீச்சாளர்களாக மட்டுமே காணப்படுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் காலத்தின் தேவை கருதி, துடுப்பாட்ட வீரர்களாக எத்தனிப்பதில்லை. இவர்கள் அடித்தாடத் தேவையில்லை. தடுத்தாடுவாவது கற்றுக்கொள்ளவேண்டும் அல்லவா? இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசையிலும் யாரோ ஒருசிலர் பிரகாசிக்கின்றார்கள். யார்? எப்போது? எந்த நேரத்தில் பிரகாஷிப்பார்கள் என்பது குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. இதுவும் இலங்கை அணியின் தோல்விகளுக்குக் காரணமாகிறது. இனிவரும் டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி இவற்றில் கவனம் கொண்டால் அவுஸ்ரேலிய அணிக்கே சவால் விடலாம்.

இலங்கை அணியின் தோல்விக்கு பாகிஸ்தான் அணியின் திறமையும் காரணம் என்பதை மறுத்து விட முடியாது. முதலாவது போட்டியிற் பெற்ற தோல்வியைப் பாடமாகக்கொண்டு இரண்டாவது டெஸ்டில் சாதித்து விட்டார்கள் பாகிஸ்தான் அணியினர்.

- லெஸ்லி.

## உடைந்த நிலையில் பெரியகுளம்

முல்லைத்தீவு - பெரியகுளம் உடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்த குளத்தை நம்பி 40 ஏக்கர் பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள உள்ள போதிலும், இந்தக் குளம் உடைபெடுத்தால் நெறசெய்கையை மேற்கொள்ள முடியாத நிலையுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

1991 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ இராணுவ நடவடிக்கையின் போது இந்தக் குளம் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர் நாளை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள்

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டுப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து, மாவீரர் நாளை முன்னெடுக்கும் நோக்கில் பொது இடங்கள் துப்புரவு செய்தல், இரத்ததானம் செய்தல், பயன்தரு மரநடுகை போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், மாவீரர் செயற்பாட்டுக் குழுக்கள் பிரதேச ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டு, மாவீரர் நாள் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# முல்லைத்தீவில் 2 பாடசாலைகளில் கணினிப் பயிற்சி நிலையங்கள்

(முல்லைத்தீவு)

பொருண்மிய மதியுரையகத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளில், 5000 மாணவர்களுக்கு அடிப்படைக் கணினி அறிவைப் புகட்டும் திட்டத்தின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளில், தகவல் தொழில் நுட்ப பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. மங்கள விளக்கை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியை அதிபர் சிவலிங்கம் ஏற்றிவைத்தார்.

அதைத் தொடர்ந்து அக வணக்கம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், கணினிப் பயிற்சி நிலையத்தை பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா கணினிப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்தார். பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணியாளர் சி.சுகுணன், குருக்கள் சடாச்சரசர்மா ஆகியோரால் மங்கள விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் - வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவட்ணராஜா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு மாணவன் நிகால் றீகனின் நன்றியுரையுடன் இந்த நிகழ்வு நிறைவுபெற்றது.

முல்லைத்தீவு மகாவித்தியத்தின் ஆசிரியர் ஜெயவீரசிங்கம் தலைமையில் அன்று பிற்பகல் 1.00 மணியளவில் நிகழ்வு ஆரம்பமானது. மங்கள விளக்கை பொருண்மியமதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, முல்லைத்தீவு மகாவித்தியாலய உப-அதிபர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏற்றி வைத்தார்.

கணினிப் பயிற்சி நிலையத்தின் நாடாவைவெட்டி, கரைச்சிப் பிரதேச செயலர் சோதிநாதன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசியர் அ.நவரட்ணராஜா கணினிப் பயிற்சியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா, கரைச்சி பிரதேச செயலர் சோதிநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதி நிகழ்வாக முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவன் ஜெறோமின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.




## கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்டத்தின் நிகொட் நிறுவனத்தின் அனுசரணையுடன், விவசாயிகளுக்கான விவசாயம் சம்பந்தமான பயிற்சி வகுப்பும், கருத்தரங்கும் நடைபெற்றன.

இந்த நிகழ்வு கடந்த வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு கல்மடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ச.லொயிற் தலைமையில் நடைபெற்றது. (இ)

# அணைக்கட்டில் அமைக்கப்பட்ட காவலரணை அகற்றுமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வைரவர் புளியகுளத்தின் அணைக்கட்டில் பொலிஸாரால் புதிதாக காவலரண் ஒன்று அமைத்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் வவுனியா மாவட்ட அரசியற்துறையிடம் முறையிட்டுள்ளனர்.

இந்த அணைக்கட்டின் ஊடாக உக்கிளாங்குளம், கூமாங்குளம், பண்டாரிகுளம், தோணிக்கல் போன்ற பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் மக்களால் குறுக்கு வழிப் பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முன்னர் பொலிஸாரால் அமைக்கப்பட்ட காவலரணிலிருந்து சுமார் ஐம்பது மீற்றர் தூரத்திலே புதிதாக பொலிஸார் காவலரண்களை அமைத்துள்ளனர்.

இந்தக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ள வீதி ஊடாக பயணம் செய்பவர்கள் தமது போக்குவரத்துக்கு இந்த காவலரண்கள் இடையூறாக இருப்பதாகவும், அதனை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (3)

# அக்கினி பறவைகள் பாகம்-2 ஒலிப்பேழை அறிமுக விழா மன்னார் நகர மண்டபத்தில்

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், போராட்ட காலத்திலும், போர்ச்சூழலிலும் இலக்கியப் படைப்புக்கள் வெளியிடப்பட்டு வருகிறது என, மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற 'அக்கினிப் பறவைகள்' பாகம் - 2 ஒலிப்பேழை அறிமுக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு - மன்னார் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவரசி தலைமையில் இடம்பெற்றது. முதற்பிரதியை நிதர்சன மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் பிரமிளா வழங்க, மாவீரர் லெப்டினன்ட கேணல் விக்ரரின் தந்தை மருசலீன் பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரதியை நிதர்சன மகளிர் பிரிவைச் சேர்ந்த பூமா வழங்க, 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் தந்தை பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உட்படப் பல இலக்கிய ஆவலர்களும் கலந்துகொண்டனர்.

# பளை உப - அஞ்சல் அலுவலகங்களின் பணியாளருக்கு மழைக்கவசம் இல்லை

(பளை)

பளை அஞ்சல் அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள உப அஞ்சல் அலுவலகங்களில் பணியாற்றும் கோலவுடைப் பணியாளர்களுக்கு, கடந்த பல வருடங்களாக மழைக் கவசம், தொப்பி என்பன வழங்கப்படவில்லை.

கடந்த மூன்று வருடங்களாக மழைக் கவசம், தொப்பி என்பன பெறுவதற்கு உரியமுறையில் விண்ணப்பித்திருந்தும், அஞ்சல் திணைகளக் களஞ்சியத்திலிருந்து இன்று வரை இந்தப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

மழை காலம் ஆரம்பித்துள்ள இந்த வேளையில், அஞ்சல்காரர்கள் மழையில் நனைந்து, கடித விநியோகம் செய்வதால், தமக்குரிய உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள் நனைந்த நிலையிலேயே விநியோகம் செய்யப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (21)





கிளிநொச்சி - பெரியகுளம் வீதிக்கு குறுக்காக வெள்ளம் பாய்வதையும், இந்த வீதியை கடப்பதற்கு மோட்டார் சைக்கிளை தூக்கிச் செல்வதையும் படத்தில் காணலாம்.

படம்: இராமநாதபுரம் செய்தியாளர்.

# உயிலங்குளத்தில் மேலும் பல புதைகுழிகள் தோண்டுவதற்கு நீதிமன்றம் அனுமதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள உயிலங்குளம் 215 ஆவது பிரிகேட் தளத்தில் இருப்பதாகக் கூறப்படும் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு, மன்னார் நீதிவான் என்.என்.எம். அப்துல்லா அனுமதி வழங்கியுள்ளார்.

உயிலங்குளம் முகாம் அமைந்துள்ள பகுதியில் பலர் கொலை செய்யப்பட்டும், புதைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கின்றன. அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான பகுதிகளைத் தோண்டுவதற்கு அனுமதியளிக்குமாறும், மாவட்ட நீதிமன்றத்தில் இரகசியப் பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார்.

பல்வேறு வாகனக் கடத்தல் சம்பவங்களும், கொலைகள் குறித்தும் முகாமில் கடமை யாற்றிய அநுருத்த சம்பிக்க என்ற மேஜர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து, அநுராதபுரத்தைச் சேர்ந்த சாரதி ஒருவரின் சடலம் 215 ஆவது பிரிகேட் முகாமில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது.

இந்த முகாம் வளவில் மேலும் பல சடலங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், அந்தப் பகுதியில் தோண்டுவதற்கு இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(மல்லாவி)

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கள் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் நுளம்பு, ஈக்கள் போன்றவற்றை தடுப்பது பற்றிய அறிவுறுத்தல்களை சுகாதாரத் தொண்டர்கள் மூலம் மக்களுக்கு விளக்கம் அழிக்கப்பட்டன.

# சமுர்த்தி வங்கியூடாக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 18 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும், மீளக்குடியமர்ந்தும், இதுவரை மீளக்குடியமர்வு நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாவைப் பெறாத குடும்பங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கான கடிதங்கள் - யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலிருந்து அனுப்ப்ட்டுள்ளன.

இந்த நிவாரணக் கொடுப்பனவை மருதங்கேணி சமுர்த்தி வங்கிச் சங்கம் மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகிறார். (21)

# 4 பாடசாலைகள் சொந்த இடத்தில் இயங்க முடியாத நிலையிலுள்ளன

வவுனியா மாவட்ட நெடுங்கேணிக் கோட்டத்தில் நான்கு பாடசாலைகள் சொந்த இடங்களில் இதுவரை இயங்க முடியாதநிலையில் காணப்படுகின்றன.

வெடிவைத்தகல், ஊஞ்சல்கட்டி, நொச்சிகுளம், கேரைமோட்டை ஆகிய நான்கு கிராமங்களின் பாடசாலைகளே சொந்த இடத்தில் இயங்க முடியாமல் இணைப்புப் பாடசாலையாகவே இதுவரை இயங்கி வருகின்றன.

1997 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு நடவடிக்கையின்போது, இடம்பெயர்ந்த இந்தப் பாடசாலைகளே இதுவரை சொந்த இடத்தில் இயங்காதுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்*
*உறைக்கடுகி ஒல்லைக் கெடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அர்த்தமற்ற பேச்சு

ஜனாதிபதி சந்திரிகா தனது இந்திய விஜயத்தின் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் புதுடெல்கியில் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை ஒழுங்குசெய்த கருத்தரங்கில் உரை யாற்றியிருந்தார்.

இந்த உரையில்– தன்னால்தான் நாட்டில் சமாதானம் உருவாகிவருகிறதென்பது போலவும், சமாதான முயற்சிக ளின் மீதான நம்பிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதுவரை காலமும் இல்லாதளவுக்கு – மூன்றாண்டு களாக யுத்த நிறுத்தம் நீடிப்பதே சமாதான முயற்சிகள் முன்னகர்கின்றன என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிற தென்றும் அவர் கூறியிருக்கிறார்.

சமாதான முயற்சிகள் கடந்த ஒன்றரை வருடங்களாக முடங்கிப் போய்க் கிடக்கின்ற சூழலில்தான் ஜனாதிபதி சந்தி ரிகா இவ்வாறு சுயதம்பட்டம் அடித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர் பான முயற்சிகளே இன்னமும் வெற்றிபெறவில்லை. இந்த நிலையில் அடுத்த வாரம் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு இலங்கை வந்து அரசாங்கத்துடனும் – புலிகளின் தலைவர் வே. பிரபாகர னுடனும் பேச்சு நடத்தவுள்ளது.

ஆயினும், இதற்கு முன்னதாகவே நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் இலங்கை விஜயத்தின் மூலம் எந்தத் திருப்பமும் ஏற்பட வாய்ப்பில் லையென நம்பிக்கையீனம் வெளியிட்டிருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஜனாதிபதி சந்திரிகா சமாதான முன்னெடுப்புக்களில் நம்பிக்கை தோன்றியி ருப்பதாக கூறியிருக்கிறார்.

இதைவிட மூன்றாண்டுகளாக யுத்த நிறுத்தம் தொடர் வதை வைத்துக்கொண்டு சமாதான முயற்சிகள் முன்னகர் கின்றன என்று எப்படிச் சொல்லமுடியும்?

மூன்றாண்டுகளாக யுத்தநிறுத்தம் தொடர்வதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு என்ன பங்கு இருக்கிறதென்ற கேள்வி எழுப்பப்பட்டால் – ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட போர் நிறுத்தத்தைத் தொடர்கிறார் என்பதைத்தவிர வேறெதுவும் இல்லை.

போர் நிறுத்தத்தை முறித்துக் கொள்ளமுடியாத நெருக் கடிக்குள் இருப்பதால்தான், சமாதானப் பேச்சுக்கள் தொடர் கிறதோ, இல்லையோ – யுத்த நிறுத்தம் நீடித்துவருகிறது.

இப்படிப்பட்ட நிலையில் ஜனாதிபதி சந்திரிகா புதுடெல்கி மாநாட்டில் மூன்றாண்டுகள் யுத்தநிறுத்தம் நீடிப்பது – சமா தான முயற்சிகள் முன்னகர்கின்றன என்பதையே வெளிப்படுத்து வதாகக் கூறியிருக்கிறார்.

இன்னொரு பக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகா தனது இந் திய விஜயத்தை பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காகவே பயன்படுத்திக் கொள்கிறார்.

பாதுகாப்பு ஒப்பந்தம் ஊடாக – இந்தியாவின் பாதுகாப்பு உதவிகளையும், படைத்தளபாட உதவிகளையும் பெற்று படைகளைப் பலப்படுத்திக் கொள்வதுதான் ஜனாதிபதி சந்தி ரிகாவின் திட்டமாகும்.

அவசர அவசரமாக இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தங் களைச் செய்துவிடவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா வின் அரசாங்கம் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருக் கிறது.

சமாதான முயற்சிகள் முன்னேற்றம் கண்டுவருவதாக ஜனாதிபதி சந்திரிகா கருதினால் – பாதுகாப்பு ஒப்பந்தத் தினூடாக படை உதவிகளைப் பெறுவதற்கு அரசாங்கம் ஏன் இத்தனை ஆர்வம் காட்டவேண்டும்?

சமாதான முன்னெடுப்புக்கள் முன்னேற்றம் கண்டுவரு வதாக ஒரு புறத்தில் சர்வதேச சமூகத்துக்கு பிரசாரம் செய்து கொண்டு – ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் சந்திரிகா வின் தந்திரங்களையே இவரது புதுடெல்கி உரையும் வெளிப் படுத்துகிறது.

சமாதானத்தின் பெயரால் சர்வதேச சமூகத்தை இனி மேலும் ஏமாற்றப் பார்க்கலாம் என்ற கருத்து நிலையில் இருந்து அவர் மாறவில்லையென்பது மட்டும் தெளிவா கிறது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய நாடகங்களை இலங்கை மக்கள் மட்டும் ஒருபோதும் நம்ப மாட்டார்கள். ஆனால் இந்திய மக்கள் இதை நம்புவார் களாயின் – அவர்களும் இவரை நம்பி முட்டாளாக வேண்டி யிருக்கும் என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# ஆளுநரின் வருகை குறித்து ஈழவேந்தன் எம்.பி. கண்டனம்

பலரது எதிர்ப்புக்களையும் மீறி ஆளுநர் யாழ் குடாநாட்டுக்கு வந்து, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பொது நூலகம், தெல்லிப் பழை புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு இடங் களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளமை கண்டிக்கத்தக்கது, என நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் - ஆளுநர் வருகைதந்து யாழ் அரச அதிபருடன கைலாகு கொடுத்து ஏதோ உறுதியளித்து தென்னங்கன்றும் நாட்டி யாழ் பொது நூலகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகிய இடங்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

எமக்குக் கிடைத்த செய்தியின்படி யாழ் பொதுசன நூலகம வெளியுறவு அமைச்சின் கீழ் தான் இயங்கும் என்றும் அறிகின் றோம். ஆனால் அது உண்மையில் உள்ளூராட்சி அமைப்பின் கீழ் இயங்கவேண்டியது. எனவேதான் ஆளுநரின் வருகையின் உள்நோக்கம் யாதோ யாம் அறியோம். யாழ் நூலகத்தை அன்று எரித்தவர்கள் வெறும் சிங்களப் பொது மக்கள் அல்ல. சிங்களத் தலைமைப்பீடங்களின் தூண்டுதலில்தான் குறிப்பாக முன்னாள் அமைச்சர்களான சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்க ஆகியோரின் தூண்டுதலால் ஆசியாவின் தலை சிறந்த நூலகமான எமது யாழ் நூலகம் 1981 ஆம் ஆண்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இவற்றை நாம் எளிதில் மறப்பதற்கில்லை. எனவே தான் பதினெண்ணாயிரம் விடுதலைப் புலிகளின் சாவிற்கும் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களின் உயிரிழப் பிற்கும், உடமைகளைப் பொறுத்த வரையில் கணக்கிட முடியாத அளவில் கோடிக்கணக்கான இழப்பிற்கும் ஆளாக்கப் பட்ட நாம், அழையா விருந்தாளிக்ளாக இங்கு வருகைதரும சிங்கள தலைமைப் பீடத்தின் தூதுவர்களையும், அவர்கள் எம் நிலையைப் பார்த்து முதலைக்கண்ணீர் வடிப்பதையும் வன்மையாகக் கண்டிப்பதோடு - செயல் வடிவிலும் எம் எதிர்ப்பைக் காட்டுகின்றோம். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எமக்கு இத்துறையில் முன்னோடிகளாக விளங்கி, முன்னாள் புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன சில காலத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தபோது கண்ணியத்துடன் அவர்கள் காட்டிய எதிர்ப்பை நாம் நன்றியு ணர்வோடு நினைவு கூருகின்றோம்.

எனவேதான் இலட்சக்கணக்கில் எம்நாட்டு பனை, தென்னை வளங்களை அழித்தவர்கள், பொதுமக்கள் அறியாத நிலையில் பின்கதவால் பலாலி விமான நிலை யத்தில் இறங்கி மேற்குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு தென்னங்கன்றுகள், மாங்கன்றுகள் நட்டு, எம்மை ஏமாற்ற முயல்வதை, யாழ் அரச முகவர் உணர்ந்தோ, உணராமலோ மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாது ஆளுநரை கைலாகு கொடுத்து வரவேற்று மேற்குறித்த இடங்களை பார்வையிட வைத்தமை மிகவும் கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட் டுள்ளார்.

# பொது விழிப்புணர்வு வாரம் நீடோ நிறுவனம் பிரகடனம்

இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் மற்றும் முதியோர் களை கல்வியிலும் தொழில்சார் பயிற்சிகளிலும் வலுப்படுத்தும் முகமாக நீடோ நிறுவனத்தால் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை சகல மாவட்டங்களிலும் விழிப்புணர்வு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து நீடோ நிறுவனம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் - போர்க்கால சூழ்நிலையில் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியோர்கள் என அனேகமானோர் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுக் காணப் படுகின்றனர். அந்த வகையில் சமூக பொருளாதார அபிவிருத் திக்கு மக்களை தயார்ப்படுத்தல் என்பது ஒரு கடினமான பணியாகும். இருப்பினும் இந்த விழிப்புணர்வினூடாக தங்க ளுக்கு எமது நிறுவனம் ஓர் செய்தியைச் சொல்லத் தயாரா கவுள்ளது.

சமுதாய முன்னேற்றத்திற்கமைய மக்கள் நிலைமைகளை நன்கு உணர்ந்து விழிப்புணர்வடைய வேண்டும். அத்தோடு இளம் சமூகம் தமது வாழ்க்கையை சற்றுச் சிந்திக்க வேண்டும். அதாவது முன்னைய காலங்களில் எமது சமூகத்தின் கல்வி நிலைமை மிகவும் உன்னதமான நிலையில் காணப்பட்டது. இருப்பினும் இப்பொழுது அந்த நிலைமை மாறி இளைஞர், யுவதிகள் இன்று தமது இலக்கை அடைய, சரிவரத் திட்டமிடமுடியாத நிலையில் காணப்படுகின்றார்கள். பலர் வீதியோரங்களில் வீண் பொழுதுகளைப் போக்குவதுடன மதுபாவனைப்பழக்கம் இளம் சமுதாயத்திடம மேலோங்கிக் காணப்படுகிறது. மற்றும் கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தும் சினிமாத்துறையில் தமது நேரங்களை கூடுதலாக செலவழிக்கின்றார்கள்.

இவற்றினால் கல்வித்துறையில் அக்கறையின்மை ஏற்பட் டுள்ளதோடு எமது பகுதியில் கல்வித்தரம் குறைந்து செல்வதைக காணக்கூடியதாக உள்ளது. இவை வேதனைக்குரிய விடயம் ஆகும். கூடுதலாக சமூகமட்டத்தில் காணப்படும் தாழ்வு மனப்பான்மை என்பது பெரும் சிக்கல்த் தன்மையை ஏற்படுத்துகின்றது. இவற்றினை மாற்றவேண்டிய பொறுப்பு இளைஞர், யுவதிகளையே சார்ந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சேது சமுத்திரத்திட்டப் பாதிப்பு; திறந்த மனதுடன் பேச்சு நடத்தலாம்

### இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

சேது சமுத்திரத் திட்டமானது 10 அல்லது 15 வருட கால அடிப்படையில் செயற்படுத்தப்படவுள்ளமையால் அதன் மூலம் இலங்கைக்கு ஏற்படுவதாகக் கூறப்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகாண முடியும் என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மன்மோகன் சிங்கைச் சந்தித்த போதே இந்த கருத்து வெளியிடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் சேதுசமுத்திரத் திட்டம் ஆரம்பக் கட்டத்தி லேயே உள்ளது. அதனை உரிய முறையில் அமுல் செய்யும் போது, இலங்கைக்கு ஏற்படப்போவதாகக் கூறப்படும் பாதிப்புகள் குறித்துத் திறந்த நிலையில் பேச்சுவார்த் தைகளை நடத்தலாம் என மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வானது ஒற்றையாட்சியின் கீழ் ஏற்படுத்தப்படுவதையே இந்தியா விரும்புபவதாக மன்மோகன் சிங் குறிப்பிட்டார். இதற்கிடையில காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியையும் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்து, இலங்கை இனப்பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக கருத்துக்கள் பரிமாறிக்கொள் ளப்பட்ட போதும், அது குறித்து இருதரப்புகளும் ஊடகங் களுக்கு கருத்துக்களை வெளியிடவில்லை. இதேவேளை ஜனாதிபதி நேற்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அரசியல்...

கே.ரீ.கணேசலிங்கம்

# அரசியல் நோக்கங்களுடன் நகர்ந்துள்ள அகாஷி



இலங்கையின் இனப்பிரச்சினை மிக நீண்டகாலத்துக்கு முன்பே சர்வதேச மட்டத்தில் பிரபலம் பெற்றுவிட்டது. இன்றைய சமாதான காலம் மேலும் அதன் பங்கை அதிகரிக்க வைத்துள்ளது என்றே கூறலாம்.

அரசுகள் மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டன. ஆனால், தற்போது மேற்கின் இன்னொரு பக்கமும் தென்படத் தொடங்கிவிட்டது. நோர்வே என்னதான் அமெரிக்க, ஜப்பான் கூட்டில் இருந்தாலும் விடுதலைப்புலிகளின் அரசியல் நகர்வால் நோர்வே தான் போட்ட திட்டத்தையும், இலக்கையும் எட்டமுடியாமல் போய்விட்டது. இதனால் நோர்வே மீது இலங்கை விடயத்தில் ஏனைய இரண்டு அரசுகளுக்கும் வெறுப்புணர்வு ஏற்பட்டுவிட்டது. மறுபக்கத்தில் விடுதலைப் புலிகள் ஸ்கன்டிநேவிய நாடுகளையும், ஐரோப்பிய யூனியன் நாடுகளையும் இலக்கு வைத்து நகரத் தொடங்கியுள்ளனர். அவர்களின் அரசியல் நகர்வால் இலங்கை அரசு மட்டுமல்ல ஜப்பான், அமெரிக்கா போன்ற சக்திகளும் அச்சமடைந்துள்ளன. இதனால் மேற்குக்குள் இரண்டு பிரிவுகள் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான கருத்தியலில் வேறுபட்டுள்ளன. இவையிரண்டிலும் ஜப்பான் தரப்பு விடுதலைப்புலிகளை ஆதரிப்பதா? இலங்கை அரசை ஆதரிப்பதா? என்ற குழப்பத்துக்குள் தற்போது அகப்பட்டுள்ளன. ஒருவகையில் இரண்டு தரப்பையும் சமதூரத்தில் வைத்துக் கொள்வது போல் காட்டிக் கொள்ள முயலுகின்றன. ஆனால்



சாதுரியமான வேலையை அகாஷி மேற்கொள்ள விரும்பினார். அதற்கு நிதி உதவியை ஒரு துருப்புச் சீட்டாக அகாஷி பயன்படுத்தி வருகின்றார். நிதி கிடைப்பதென்பதும், கிடைக்காமல் போவதும் இலங்கை அரசின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது என்பதை அகாஷி ஜனாதிபதியை சந்தித்த போது

சமாதான காலத்தில் தமிழரின் அரசியல் பிரச்சினையை முன் வைத்து பிராந்திய சர்வதேச சக்திகள் தமக்கிடையே மாறி மாறி மோதிக் கொள்ளும் இராஜதந்திர அரசியலைக் காணமுடிகின்றது. இதில் பிராந்திய சர்வதேச அரசியல் சக்திகளின் பலம் என்பது போல் இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் வலுவான அடித்தளத்ததைக் கொண்ட சக்திகளாக சமவலுவை வெளிப்படுத்துபவர்களாக காணப்படுகின்றனர். இந்த வகையில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியின் தற்போதைய விஜயத்தில் அரசியல் பக்கத்தில் பரிசீலிப்போம்.

இலங்கை இனப்பிரச்சினையோடு அதிக ஈடுபாட்டையும், தீர்மானங்களையும் நகர்த்தும் மேற்கு நாடுகள் வரிசையில் ஜப்பான் முதலிடத்தில் நிற்கின்றது. ஏனைய நோர்வே, அமெரிக்கா என்பன காணப்பட்டாலும் மூன்று நாடுகளும் ஒரே இயங்கு தளத்தில் இணைந்திருக்கும் அரசுகளாகவே அமைந்துள்ளன. ஜப்பானிய நகர்வுக்கும் ஏனைய இரண்டு நாடுகளும் உந்துதலாக இருப்பது போன்று நோர்வேயின் நகர்வுக்கும் அவையே அடிப்படைச் சக்திகளாக உள்ளன.

அண்மைக்காலத்தில் நோர்வேயின் வருகையும் சமாதானம் பற்றிய முயற்சியும் மிகத்தீவிரமாக வெளிப்படுத்தப்பட்டது. அது முடிந்த கையோடு ஜப்பானின் வருகை சாத்தியப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டம் அமெரிக்காவின் தெற்காசிய பகுதிகளுக்கான தூதுவர் றிச்சட் ஆர்மிரேஜின் வருகை அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறு இவர்கள் மாறி மாறி நகர்ந்த போதும், நின்று போன பேச்சு நகரவில்லை என்பதும், அவர்களால் எதுவுமே சாதிக்க முடியவில்லை என்பதும் மறுபக்கமான வாதமாக உள்ளது. ஆனால் அவர்களின் நகர்வுக்குப் பின்னால் சாதனைகளும் அந்தந்த நாடுகளின் நலன்களும் நிறைவு பெறாமலில்லை.

மேற்கு நாடுகளின் அசைவில் பிரதானமாக விளங்குவது இலங்கையில் சமாதானத்தை நீடிப்பதென்பதாகும். அவர்கள் விடுதலைப்புலிகள் பக்கமா? இலங்கை அரசு பக்கமா? என்ற கேள்வியை விட அவர்களின் நகர்வு சமாதானமான, அமைதியான இலங்கையைத் தக்கவைத்ததா? என்பதே பிரதான கேள்வியாகும். இனப்பிரச்சினை தீர்வை நோக்கி நகர்வதும், அதனை ஏற்படுத்துவதும் விடுதலைப்புலிகளினதும், இலங்கை அரசினதும் நகர்விலே தங்கியுள்ளதென்பதை மேற்கு நாடுகள் தெளிவாக விளக்கியுள்ளன.

ஆனால் போர் நிகழாது பேசுவதன் மூலம் தீர்வை எட்ட வேண்டும். அப்படியான சூழலில் மேற்கு எதிர்பார்ப்பது போல் சமாதான வழிமுறையூடாக பிணக்கு தீர்ப்பது சரியானதாக அமையுமா? என்பதும் அத்தகைய அணுகுமுறைக்கு சிங்களப் பெரும்பான்மை சமூகம் எத்தகைய அனுசரணையை மேற்கொண்டு வருவதென்பதும், மேற்குக்குப் புலப்படாத விடயமல்ல. அப்படியாயின், மேற்கு எதனை உருவாக்க அல்லது சாத்தியப்படுத்த விரும்புகிறது. அகாஷி ஏன் மிகத் தீவிரமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற பாணியில் செயல்படுகின்றார்.

இதுவரை கூறிவந்த மேற்கில் மூன்று இரண்டாவது தரப்பாகியுள்ள மேற்கு, விடுதலைப் புலிகள் பக்கமுள்ள நியாயத் தன்மைகளை ஏற்பதுடன், தமிழர்களின் தனித்துவத்தை ஏற்று செயற்படுபவையாக உள்ளன.

அகாஷியைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் ஐரோப்பிய விஜயம் அதிக சந்தேகங்களை ஏற்படுத்திவிட்டது. அவர்களின் வேகமும், விவேகமும் கூட்டான அரசியல் இலாபங்களை ஏற்படுத்தி விடலாமென அகாஷி அச்சம் கொள்கின்றார். அப்படி விடுதலைப்புலிகள் சுயாதீனமாக இர்ண்டாவது மேற்கின் அனுசரணையுடன் தீவிர நடவடிக்கையில் இறங்கிவிட்டால், இலங்கையில் முதலாவது மேற்குத்தரப்புக்கு எதுவுமே இல்லாமல் போய்விடும் என்பதோடு, இலங்கை அரசும் பலவீனப்பட்டுவிடும். அப்படியான சூழல் ஏற்படுவது ஒட்டுமொத்தமாக அமெரிக்காவின் நலனுக்கு ஆபத்தானதாக அமையும். அதனைத் தடுத்து நிறுத்துவதே அகாஷியின் விஜயத்தின் முதல் நோக்கமாகும். அதனை எப்படித் தடுத்து நிறுத்துவதென்பது அடுத்த விடயம்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால வரைபை இலங்கை அரசின் தரப்பால் ஏற்றுக் கொள்ளவைப்பது முழுமையாக அல்ல. அதிலுள்ள அநேகமான விடயங்களை நீக்கிவிட்டு, இரண்டு தரப்புக்கும் சாத்தியமாகக் கூடியவைகளை ஏற்று, பேசுவதற்கு இலங்கை அரச தரப்பை தயார்படுத்துதல். அதற்காக இலங்கை தரப்பில் எல்லோரையும் சந்தித்து உரையாடியதுடன், தமிழரின் தரப்புக்கு நல்ல பதிலையும் கொடுத்துள்ளார். அதாவது தமிழ் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது பேச்சுக்கள் தொடராதுவிட்டால் நிதியில்லை என்பதை அகாஷி வெளிப்படுத்தியிருந்தார் என்பதாகும். ஆனால் மறுகணம் நிதிவழங்கும் நாடுகளுக்கு அவர் வேறு விதமாக குறிப்பிட்டாலும் ஆச்சரியமடைய வேண்டியதில்லை. அது ஜப்பான் போன்ற சக்திகளின் அரசியலில் காணப்படும் இயல்பான அணுகுமுறையாகும். எனவே விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய விஜயத்தால் அதிக பாதிப்பை இலங்கை அரசோ, ஜப்பான் போன்ற தரப்போ அடையக்கூடா தென்பதே அகாஷியின் நோக்கமாக உள்ளது.

இரண்டாவது பிரதான நோக்கமாக அகாஷி கொள்வது பிராந்திய சக்தியிடம் சரணடையும் இலங்கை தரப்பை மீட்டெடுக்க முயல்வதாகும். அதாவது இந்தியத் தரப்பு இலங்கை விடயத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க புதிதாக சேது சமுத்திர கால்வாய்த் திட்டத்தை எதிர்ப்பதாக இலங்கைத் தரப்பு காட்டிக் கொண்டாலும், உள்ளூர ஒரு அனுசரிப்பும் இல்லாமலில்லை. அந்த வகையான சூழலிலேயே இந்திய - இலங்கையுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்யத் திட்டமிட்டு வருகின்றது.

அவ்வாறான பாதுகாப்பு உடன்பாடு மேலும் இந்தியத் தரப்பின் செல்வாக்கை அதிகரிக்கும். அது மேற்கு சக்திகளின் தீவிர ஊடுருவலை பாதிப்புடன், தமது விருப்புக்கு ஏற்ப இலங்கை அரசை கையாளமுடியாத நிலை ஏற்படும். இதனால் இந்தியத் தரப்பை கட்டிப்போடவும், இலங் கையை நிதானமாக செயற்படவும் ஓர் சூசகமாக வெளிப்படுத்தியுள்ளார். ஜனாதிபதியை அகாஷி மிகப் பிந்தியே சந்தித்துள்ளார் என்பதும், அமெரிக்கத் தரப்பு எத்தகைய பிரிவினை முதன்மைப்படுத்துகின்றதென்பதும் தெளிவாகும் அரசியலாகும்.

மூன்றாவது இலங்கை அரசு இந்தியாவுடன் கூட்டு அமைத்துக் கொண்டு, யுத்தத்துக்கு தயாராவதை அகாஷி மிகத் தெளிவாக விளங்கியுள்ளார். அவ்வாறு இலங்கைத் தரப்பை யுத்தத்துக்குள் செல்லவிடாது, தடுப்பதுடன், அத்தகைய நடவடிக்கையால் ஏற்படப் போகும் ஆபத்தையும் அகாஷி உணர்ந்துள்ளவர் போலவே, அவரது செயற்பாடு காணப்படுகின்றது. சமாதான காலத்தில் அடையக்கூடியதை போர்க்காலத்தில் அடைய முடியாததென்பதை ஜப்பான் புரிந்துள்ளது. மேலும், போர் இலங்கை தரப்புக்கு அதிக இலாபம் எதனையும் ஏற்படுத்திவிடாது என்பதும், ஜப்பானிய தரப்புக்கு நன்கு தெரியும். எனவேதான் போரைத் தொடக்காது தடுத்து, தொடர்ந்தும் பேச்சு மேசையில் இரு தரப்பையும் அமர்த்துவதே அகாஷியின் விஜயத்தின் அடிப்படையாகும்.

அகாஷி தனது நிலைப்பாட்டை சாத்தியப்படுத்த பல தடவை இலங்கை வந்துள்ளார். இது அவரது ஏழாவது விஜயம். அனைத்து விஜயமும் நெருக்கடி ஏற்படும் போதே அமைந்தது. அவரது நேரடி உதவியாளரான ரணில் விக்கிமசிங்க கூறுவது இடைக்கால தன்னாட்சி வரையிலிருந்து பேசவேண்டும் என்பதாகவுள்ளது. அதாவது இங்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் பேச்சாளர் போன்று நடந்து கொள்கின்றார். இடைக்கால தன்னாட்சி மட்டுமல்ல பேச்சுக்களையும், சமாதான முயற்சியையும் சமமாக மதிக்கும் ஒரு சிங்களத் தலைவராக காணப்படுகின்றார். கட்சியின் நலனுக்கு அப்பால் ரணிலின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. இவை எல்லாம் ரணிலின் மூளையிலிருந்து வந்ததென்பதைவிட, அமெரிக்கத் தரப்பிலிருந்து வெளியான விடயமாகவே கணக்குப் போடுதல் அவசியம். அடுத்த ஜனாதிபதி தேர்தலும், அதில் ரணில் பிரதான வேட்பாளர் என்ற வகையில் அவரது கருத்துருவாக்கத்தை மேலோட்டமாக அளவீடு செய்யக் கூடாது. அவரது கருத்துக்களின் விளைவுகள் தமிழர்களின் எதிர்காலத்தை எப்படி கையாளவேண்டும் என்பதையே கணக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்றது. ரணில் கட்சிக்கு அப்பால் இலங்கை சிங்கள மக்களின் தேசம் என்பதை கருத்தில் கொண்டே செயற்படுகின்றார். சந்திரிகா குமாரதுங்கவின் அணுகுமுறையால் விடுதலைப் புலிகள் பலமடைந்து விட்டார்கள் எனக் கருதும் ரணில், அதனை எந்த ஆரவாரிப்புமின்றி நாசூக்காகச் சாதித்துவிடப் பார்க்கின்றார்.

எனவே அகாஷியின் விஜயத்தின் பிரதான நோக்கம் விடுதலைப் புலிகள் அதிக இலாபங்களை எட்டிவிடக்கூடாதென்பதாகும். அவ்வாறே இலங்கை அரசாங்கத் தரப்பும் ஆபத்தான வீழ்ச்சியை அடைந்துவிடக் கூடாததும் அவரது நகர்வில் பிரதான அம்சங்களாகும். ஆபத்தான நிலையிலிருந்த இலங்கைத் தரப்பை மீட்டெடுப்பதையே நோக்கமாகக் கொண்டு அகாஷி செயற்படுகின்றார். ✡

---

செய்திக்கட்டுரை...

## குடிநீர் பிரச்சினை தீராதா என ஏங்கும் எழுவைதீவு மக்கள்

ஊர்காவற்துறை செயலகப் பிரிவுக்குள் அடங்கும் இரு தீவுகளில் ஒன்றாக எழுவைதீவுப் பகுதி மக்கள் தங்களது நாளாந்த தேவைக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு தங்களது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றனர்.

சுமார் 250 குடும்பங்கள் வாழும் இந்தத் தீவிலே மக்கள் செறிவாக வாழும் துறைமுகத்தை அண்டிய பகுதியில் நன்னீருக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது. இதேவேளை மக்கள் குறைவாக வாழுகின்ற எழுவைதீவு வடக்குப் பகுதியிலே ஓரிரு நன்னீர்க் கிணறுகள் உள்ள போதும் கோடைகாலத்தில் அவையும் கையைவிரித்துவிடும் நிலைதான்.

இந்தவகையிலே தீவு மக்களின் குடிநீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய வெளியிடங்களில் இருந்துதான் நன்னீர் கொண்டுவரவேண்டும். இதனை அரசதுறை சார்ந்தவர்கள்தான் மக்களது நன்மைகருதி மேற்கொள்ளவேண்டும் என்பது அங்குள்ள மக்கள் மத்தியில் அலைமோதும் ஒரு வேண்டுகோளாகும்.

வரட்சிக் காலங்களில் ஊர்காவற்துறைப் பிரதேசசபையால், ஊர்காவற்துறையிலிருந்து படகு மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டுவந்த போதும், தற்போது குடிநீர் சேவைக்கென பயன்படுத்தி வந்த படகு பழுதடைந்திருப்பதனால், குடிநீர் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கு மாற்றீடாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

இதேவேளை எழுவைதீவிலுள்ள பிரதேசசபை உப அலுவலகத்தில் இரண்டு சக்கர உழவு இயந்திரமூலம் இழுத்துச் செல்லப்படும் நீர்த்தாங்கி ஒன்றும் உள்ள போதும், அதனைக் கொண்டு நன்னீருள்ள எழுவைதீவு வடக்குப் பகுதியில் இருந்து மக்கள் செறிவாக வாழும் தெற்குப் பகுதிக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என்பது அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் வேதனைக்குரியதொன்றாகத் தெரிவிக்கப்படுகின்றது. நீண்டதூரம் சென்றே நன்னீர் பெறவேண்டும். கோடைகாலம் என்றால் அதுவும் இல்லை.

இந்தவகையிலே, யாழ்.குடாநாட்டில் எங்குமில்லாதவாறு தீவின் தென்கிழக்கு முனைப்பகுதியில் கடற்கரையை அண்டிய மணல் பகுதியை சுமார் ஒரு அடி ஆழத்துக்கோ கிண்டினால் நீர்



மிகவும் நன்னீராக உள்ளது. இதனையும் மக்கள் பெரும்பாலானோர் பாவித்து வருகின்றனர். ஆனால் இவ்வாறு பெறப்படும் நீரானது எந்தளவு தூரத்துக்குச் சுத்தமானது என்று இதுவரை யாரும் எண்ணிப்பார்க்கவில்லை. ஆனால், அந் தப் பகுதி மக்கள் இவ்வாறு வடித்தெடுக்கப்படும் நீரை கொதிக்கவைத்தே குடிப்பதாகக் கூறுகின்றனர். இந்த சொல் இந்தச் சுகாதாரம் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியது தான்.

இந்தவகையிலே எழுவைதீவிலுள்ள மக்கள் மாரிகாலத்தில் தங்களது தேவைக்குரிய நீரைத் தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்வதாகவும், கோடைகாலத்தில்தான் பெரும் கஷ்ரங்களை எதிர்கொள்வதாகவும் ஆதங்கப்படுகின்றனர். அத்துடன் கோடை காலத்தில் தங்களுக்குத் தேவையான குடிநீரை வெளியிடங்களில் இருந்து கொண்டு வந்து விநியோகிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுத்துத் தங்களது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர்.

கண்ணன்

# புஷ்ஷின் அமைச்சரவையில் விரைவில் மாற்றம் வரவுள்ளது



ஜோர்ஜ் புஷ் கொலின் பவல் ரம்ஸ்பீல்ட்

அமைச்சரவை மாற்றம் தவிர்க்க முடியாதது. புதியவர்கள் சிலர் அமைச்சர்களாக்கப்படலாம்," என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றுள்ள அதிபர் புஷ் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அமைச்சரவை மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகளை மாற்றியமைப்பது குறித்து ஆலோசனை செய்து வருகிறேன். அமைச்சரவை மாற்றம் தவிர்க்கமுடியாதது. நிச்சயமாக, அமைச்சரவையில் மாற்றம் இருக்கும். ஆனால், யார் யாருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்பதை இப்போது என்னால் கூற முடியாது. இது போன்ற மாற்றங்கள் எந்த ஒரு நிர்வாகத்திலும் வழக்கமாக நடககக்கூடியதே என புஷ் கூறினார்.

இதற்கிடையில், தற்போதைய இராணுவ அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஆகிய இருவரையும் மாற்றுவது குறித்து குடியரசுக்கட்சி தலைவர்களிடையே ஆலோசனை நடைபெற்று வருகிறது. எனினும், உடனடியாக மாற்றம் எதுவும் இருக்காது. சில காலத்திற்குப் பிறகே மாற்றம் இருக்கும் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரம்ஸ்பீல்டுக்கு பதிலாக தற்போது இராணுவதுணை அமைச்சராக இருந்துவரும் பால் உட்போவிட்ஸ், இராணுவ அமைச்சராக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. எனினும் ஈராக்கில் சோதனையிட்டு பேரழிவு ஆயுதங்களை கைப்பற்ற முடியாமல் போனதால் பால் உட்போவிட்ஸ் மீது செனட்சபை அதிருப்தியில் உள்ளது.

இது குறித்து பென்ரகன் தலைமை செய்தித் தொடர்பாளர் லோரன்ஸ் டி ரீட்டா கூறுகையில், "72 வயதாகும் ரம்ஸ்பீல்ட் ஈராக்கில் பெரும்பணி செய்துள்ளார். இனிமேல் அவரது பணி, பனிப்போருக்குப் பிந்திய காலத்துக்கு ஏற்றவாறு அமெரிக்க இராணுவத் தில் மாற்றங்கள் கொண்டுவருவதே,'' என்றார்.

இதேபோல் பவல் மாற்றத்தை மறுத்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ரிச்சட் பவுச்சர் கூறுகையில், அடுத்த சில வாரங்களில் பவலின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் தொடங்கிவிடும். இதற்காக பயணத்திட்டம் தயாராகி வருகிறது என்றார்

ஆனாலும் வெளிநாட்டு அமைச்சர் பவலின் இடத்திற்கு ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் டான்போர்த் புதிய வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதித்துறை அமைச்சர் ஜோன் அஷ்க் ராப்ட் பதவியும் பறிபோக இருக்கிறது. உடல் நலம் இல்லாததால், அவர் பதவி விலகுவார். அவா பதவி விலகினால் லாரி தொம்சன் புதிய நீதித்துறை அமைச்சராவார்.

நிதி அமைச்சர் ஜோன் ஸ்நோ உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் டாம் ரிட்ஜ், கல்வி அமைச்சர் ராட் பைகே, சுகாதார அமைச்சர் டாமி தொம்சன், போக்குவரத்து அமைச்சர் நார்ம் மினெட்டா ஆகியோரும் பதவி இழப்பார்கள் என்று கூறப்படுகிறது.

# இஸ்ரேல் ஹெலிதாக்குதல் இரண்டு பலஸ்தீனர் பலி

இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் காஸாப் பகுதியிலுள்ள ஜெவிஸ் குடியிருப்பு பகுதிமீது நடத்திய தாக்குதலில் குறைந்து இரண்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட இருவரும் இஸ்லாமிய அமைப்பான ஜிகாத்தைச் சேர்ந்தவர்களெனவும், இவர்கள் இருவரும் வெடிமருந்துகளைத் தாங்கிய வண்ணம் இஸ்ரேலின் குஷ்கட்ரிவ் குடியிருப்பு பகுதிக்குள் ஊடுருவ முயன்றவேளையே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதெனவும் இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்ட இருவரும் ஓமர் நுபால் (வயது 26) ராம்சி அல் - ஜபீர் (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்ந்து மூன்றாமவரும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்த போதிலும் பலஸ்தீன தகவல்கள் அதனை உறுதிப்படுத்தவில்லை.

இதேவேளை இஸ்ரேல் இராணுவத்தின் தாங்கிகள் வீடொன்றின் மீது நடத்திய தாக்குதலில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதாக பலஸ்தீன வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தபோதும் அதனை இஸ்ரேல் இராணுவம் மறுத்துள்ளது.

அத்துடன் இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது தமது தரப்பில் படைவீரர் ஒருவர் சிறிய காயங்களுக்கிலக்கானதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

## ஈராக்கின் சமரா நகர்ப் பகுதியில்

# மூன்று கார்க்குண்டுத் தாக்குதலில் 12 பொலிஸார் உட்பட 23பேர் பலி



(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடபகுதி நகரான சமராவில் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் நடத்திய மூன்று கார்க்குண்டுத்தாக்குதலில் ஈராக்கியப் பொலிஸார் 12பேர் உட்பட குறைந்தது 23 பேர் கொல்லப்பட்டு 40 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் சமரா நகரின் மேயரின் அலுவலகத்திற்கு அருகிலும், ஈராக்கிய தேசிய காவற்படையினரின் காவலரணுக்கு அருகிலும், ஆசிரியர்களின் பயிற்சிக் கல்லூரிக்கருகிலும் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்க இராணுவ தொடரணி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இரண்டு ஈராக்கிய பொலிஸார் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றபோதும், படையினரின் உயிரிழப்பு அதிகமாக இருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலில் ஈராக்கிய தேசிய காவற்படை வீரர் ஒருவர் உயிரிழந்ததை தான் கண்டதாக இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இதில் கொல்லப்பட்டவர் ஈராக்கிய தேசிய காவற்படைப் பொறுப்பாளரான அப்ரல் ரசீக் சாகர் அல் - ஹமலி எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தத் தாக்குதல்களில் இருபது அமெரிக்கப்படையினரும் காயமடைந்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த சமரா நகரை கடந்த மாதம் அமெரிக்க மற்றும் ஈராக்கிய படைகள் தாக்குதல் நடத்தி கைப்பற்றியிருந்தன.

இதேவேளை பலூஜா நகர் மீது அமெரிக்கப்படையினர் தாக்குதல் நடத்தத்தயாராகி வரும்வேளை கிளர்ச்சிவாதிகளால் சமரா நகர்ப் பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயிரிழந்த பின்னர் அரபாத் உடலை புதைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது



பலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத் இறந்த பிறகு, அவர் உடலை எங்கே புதைப்பது என்பதில் இஸ்ரேலுடன் பலஸ்தீனர்களுக்கு உடன்பாடு ஏற்பட்டது.

75 வயது பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் சுயநினைவு இழந்த நிலையில், பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறார்.

அவர் இன்னும் மரணம் அடையவில்லை என்ற போதிலும், அவர் இனிமேல் உயிர் பிழைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இறந்த பிறகு தனது உடலை புனித நகரமான ஜெருசலேமில்தான் புதைக்கவேண்டும் என்று அரபாத் விரும்பினார். அங்குதான் அவர் பிறந்தார். 1967 ஆம் ஆண்டு நடந்த யுத்தத்தின்போது ஜெருசலேம் நகரை இஸ்ரேல் கைப்பற்றி தன்னுடன் இணைத்துக் கொண்டது.

ஜெருசலேம் நகரில் அரபாத் உடலைப் புதைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று இஸ்ரேல் அறிவித்துவிட்டது. இதனால் அரபாத் உடலை எங்கே புதைப்பது என்பதும் பெரிய சர்ச்சையானது.

ஜெருசலேம் நகருக்கு பலஸ்தீனர்கள் சொந்தம் கொண்டாடி வரும் நிலையில், அங்கே அரபாத் உடலைப் புதைக்க அனுமதித்தால், அது அவர்களின் உரிமைக்கு வலு சேர்த்ததாகிவிடும் என்று இஸ்ரேல் அஞ்சுகிறது. அதனாலேயே அவர் உடலை ஜெருசலேமில் புதைக்கக் கூடாது என்பதில் அது உறுதியாக இருக்கிறது.

இதைத் தொடர்ந்து காசா பகுதியில் அரபாத் உடலைப் புதைக்கலாம் என்று இஸ்ரேல் பிரதமர் ஷரோன் கூறி இருக்கிறார்.

1967 ஆம் ஆண்டு யுத்தத்தில், இந்தப் பிரதேசமும் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டதுடன். இங்கிருந்து வெளியேற இஸ்ரேல் திட்டமிட்டு உள்ளது.

